
# வரலாறு

## ஆசிரியர் வழிகாட்டி

(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)

## தரம் 11



சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk

அச்சிடுதலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# வரலாறு

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 11

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

**சமூக விஞ்ஞானத்துறை**
**மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**
**இலங்கை**
**இணையத்தளம்: www.nie.lk** **மின்னஞ்சல் : info@nie.lk**

அச்சிடுதலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**வரலாறு**
தரம் - 11
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2015

© தேசிய கல்வி நிறுவகம்

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

***பதிப்பு :***

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
சிசாரா பிரின்ட்வே பிரைவட் லிமிட்டட்
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் பாடத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைகளை இவ்வழிகாட்டி வழங்குகிறது. இப்பாடத்திட்டத்தை அமுல்படுத்துகையில் ஆசிரியர்கள் மனதிலிருத்த வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் தமது பங்களிப்பானது மாணவர்களின் அறிகைசார், அடைவு மற்றும் நடத்தைசார் அபிவிருத்தி என்பவற்றில் பாரதூரமானதும் தொலை நோக்கானதுமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.

அறிகைசார் அடைவு என்னும் பரிமாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் ஏனையவற்றுக்கு (மற்றைய பயன்பாடுகளுக்கு) மத்தியில் கற்றல் தரம் உயர்வாக இருக்கக்கூடிய பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

- கற்பவர் தனது கல்விச் செயற்பாடுகள் தத்தமது வாழ்க்கைக் குறிக்கோள்கள் மற்றும் பணி ஆகிய இரண்டும் இலக்கையும் அடைந்து கொள்ளுதல் மற்றும் ஆற்றல்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதைப் புரிந்திருத்தல் வேண்டும்.

- கற்றல் / கற்பித்தல் செயன்முறையில் கற்பவர் தன்னை செயலூக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளும் போது (மாணவர் செயன்முறை) கன்பியூசியஸ் (Confusius) என்னும் அறிஞரது கருத்து இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.
  அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர்.
  பார்ப்பவற்றை நினைவிற் கொள்கின்றனர் ஆனால்
  செயல் ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது, கற்றுக்கொள்கின்றனர்.

- வளம் நிறைந்ததும், சவால்மிக்கதுமான சாதகமான கற்றல் சூழமைவு இருக்கும் போது கற்றல் ஆவணங்கள், உபகரணங்கள், ஆய்வு கூடங்கள், விடயங்கள் மற்றும் அனுபவங்களை பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும்;

- கற்பவருக்கு ஆக்கபூர்வமானதும், அனுகூலமானதுமான உடனடிப் பின்னூட்டல் வழங்கப்படும் போது இவ்வாறு செய்வதன் மூலம் கற்பவர் தமக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய அறிவு, திறன்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை ஒருங்கிணைப்பதுடன் உயர்மட்ட கிரகித்தலுடன் உள்ளீர்த்தலுடன் கூடிய கற்றலைப் படிப்படியாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் தமது பாடஞ் சார்ந்த அடிப்படைகளில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடையக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதும் அதன் மூலம் பரீட்சைகளை எதிர்கொண்டதன் பின்னர் தாம் குறித்த அடைவைப் பெற்றுக்கொண்டோம் என்ற மகிழ்வை அனுபவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுமே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

மாணவரின் நடத்தைசார் அபிவிருத்தி எனும் பரிமாணத்தை எடுத்துக்கொள்வோமாயின் கல்வியின் இலக்கானது அறிகைசார் அடைவினை தொழில்சார் உலகுடன் தொடர்புபடுத்தலாகும். எனவே, ஆசிரியர்களது, கரங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இவ்வழிகாட்டியானது, பாடசாலைக்கு

வெளி உலகுடன் கற்பவர் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தேர்ச்சிகள் / தகுதிப்பாடு களை மேம்படுத்த வேண்டும். பின்வரும் பரப்புக்களில் சில முக்கியமானதும் பொதுவானதுமான தேர்ச்சிகள் / தகுதிப்பாடுகள் காணப்படுகின்றன.

- ஆற்றல் மிகு (சுறுசுறுப்பாக) தொழில் தர்மம்; நேர்கணிய உளப்பாங்கு புதிது புனைதலுக்கான விருப்பு மற்றும் விடாமுயற்சி;

- நபர்களுக்கிடையிலான உறவுகள்; குழுச் செயற்பாடு ஒழுக்கம் மற்றும் வினைத்திறனான தொடர்பாடல்;

- தார்மீக விழுமியங்கள்; பன்முகத் தன்மையை மதித்தல் போன்ற குடியியல் விழுமியங் களை உருவாக்கிக் கொண்ட நபர்.

முடிவுரையாக பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலகர்கள் அனைவரும் முகாமைத்துவத்திலுள்ள 4A க்களில் (உளப்பாங்கு (Attitude), பகுப்பாய்வு (Analysis), செயல் செயற்பாடு (Action), மற்றும் பொறுப்புக் கூறல் (Accountability), கவனஞ் செலுத்துகின்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையைப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். தாங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது பற்றிய முடிவுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான பொருத்தமானதும், சாதகமானதுமான **உளப்பாங்குகளுடன்** ஆரம்பியுங்கள். (தங்களது பாடங்கள் முதலியன); ஒழுங்கமைப்பதற்கேற்ற வகையில், தகவல்களைத் தேடிப்பெற்று **பகுப்பாய்வு** செய்க. (பாடத்திட்டங்கள் முதலியன); தெரிவுகளைக் கவனத்திற் கொண்டு, வினைத்திறனான உடனடிச் செயலை மேற்கொள்க (வழங்குதல்); **பொறுப்புக் கூறலை** (உரிமைத்துவம்) எடுத்துக் கொள்வதற் கேற்ற வகையில், மேற்பார்வை செய்தல், மதிப்பிடுதல் மற்றும் பெறு பேறுகளை அளவிடுதலை மேற்கொள்க.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வழிகாட்டி பற்றிய உங்களது அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E) துணைத் தலைவருக்கு விருப்பமாயின் எனக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பேராசிரியர் குணபால நாணயக்கார
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காக பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் - கற்பித்தல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாக பயன்படுத்துவதற்குரியவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்கள் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# முன்னுரை

சமுதாய முன்னேற்றத்துக்காகப் பெரும் சேவையாற்றுவோரில் ஆசிரியர்களே முன்னிலை வகிக்கின்றனர். சுயமான வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே.

2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கிணங்க கற்பித்தல் செயற்பாட்டை வெற்றிகரமாக மேற்கொள்ளும் ஆசிரியர்களை வழிகாட்டும் வண்ணம், இவ்வாசிரியர் வழிகாட்டியை அச்சிட்டு விநியோகிப்பதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்கின்றது. தேசிய கல்வி நிறுவகம் மூலம் ஆக்கப்பட்டுள்ள இவ்வாசிரியர் வழிகாட்டியானது, மாணவர்களுக்குச் சிறந்ததொரு கற்றல் சூழலை அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை ஆசிரியர்களாகிய உங்களுக்குப் பெற்றுத் தரும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இம்முயற்சி, ஒரு சிறந்த பெறுபேற்றைத் தருவது இவ்வாசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்திப் பெறும் அனுபவங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பயன்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சியின் மூலமேயாகும். இந்நற்செயலுக்காக அர்ப்பணிக்கக் கூடிய உங்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

திஸ்ஸ ஹேவாவிதான
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
இசுருபாய,
பத்தரமுல்ல.
22.09.2015

## கலைத்திட்டக்குழு

**வழிகாட்டலும் அனுமதியும்**

| | |
|---|---|
| கல்விசார் அலுவல்கள் சபை | தேசிய கல்வி நிறுவகம் |

**பாட ஒருங்கிணைப்பு**

| | |
|---|---|
| டீ.எச்.சந்திமா நிஷானி தர்மபால | சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை |

**பாடநிபுணத்துவ சேவை**

| | |
|---|---|
| பேராசிரியர். இந்திராணி முணசிங்க | கொழும்பு பல்கலைக்கழகம் (தகைசார் பேராசிரியர்) |
| பேராசிரியர். ராஜ் சோமதேவ | களனி பல்கலைக்கழகம் (தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவனம்) |
| பேராசிரியர். பத்மசிரி கன்னங்கர | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |

**எழுத்தாளர் குழு (வெளிவாரி)**

| | |
|---|---|
| கே.எஸ். ரஞ்சனி | ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், ஹொரணை |
| டபிள்யூ.ஏ. பியசீலி | ஆசிரியர் சேவை, ஸ்ரீ ராகுல மத்திய மகா வித்தியாலயம், அளவ்வை |
| எம்.எம். நளின் பண்டார | ஆசிரியர் சேவை, குருவிட்ட மத்திய மகா வித்தியாலயம், குருவிட்ட |
| சகோதரி மேரி டொனேட்டா | ஓய்வு நிலை (அதிபர் சேவை) புனித அந்தோனியார் தேசிய பாடசாலை, வத்தளை |

**எழுத்தாளர் குழு (உள்வாரி)**

| | |
|---|---|
| டீ.எச்.சந்திமா நிஷானி தர்மபால | சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை |
| டபிள்யூ.எஸ்.எஸ். குணவர்த்தன | உதவி விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை |

**மொழிச் செவ்வையாக்கம்**

| | |
|---|---|
| திரு. எம்.எச்.எம். யாக்கூத் | முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தே.க.நி. |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைக் கலைத்திட்டத்தில் மையப்பாடங்களுள் ஒன்றாக இருந்துவரும் வரலாறு எனும் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதே விதமாக நடைமுறைப்படுத்தப்படும். 6-9 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு இரண்டு பாடவேளைகளும் 10-11 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு மூன்று பாடவேளைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10-11 ஆம் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

6-11 ஆந்தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி பிரதானமாக இருபத்தொரு தேர்ச்சிகளின் கீழ் வரலாற்றுப்பாடக் கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப் பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டி பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

'வரலாறு' எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் போது பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. தொர்பாக ஆசிரியரின் பணி/ கருமங்களை இலகுபடுத்தும் பொருட்டு, பாடத்திட்டத்தின் இரு பகுதிகள் உள்ளடங்குமாறு மாதிரிச் செயற்பாடுகள் இங்கு தரப்பட்டுள்ளன. தமது ஆக்கியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறைத் தேவையின்படி, இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ளலாம். "வரலாறு" எனும் இப்பாடத்தின் குறிக்கோள்களை அடையத்தக்க வகையில் குறைந்த பட்சம் 50 சதவீதமேனும் செயன்முறைச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் சந்தர்ப்பங்களை திட்டமிட்டு வழங்குவதன் மூலம் பாடங்களைப் பயில்வதில் மாணவரை வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

அதற்கமைய 'வரலாறு' எனும் பாடத்தின் குறிக்கோள்களை நிறைவு செய்தவாறு தேர்ச்சிமிக்க, புதிய உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்குவதற்கு வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இது தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| பாடத்திட்டக்குழு | v |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | vi |
| பாடத்திட்டம் | |
| அறிமுகம் | ix |
| தேசிய இலக்குகள் | x |
| அடிப்படைத் தேர்ச்சிகள் | xi |
| வரலாறு பாடநோக்கங்கள் | xii |
| விரிவான பாடத்திட்டம் | xiv |
| கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | |
| அலகு 11.1 கைத் தொழில் புரட்சி | 01-09 |
| அலகு 11.2 இலங்கையில் பிரித்தானியர் அதிகாரம் தாபிக்கப்படல் | 10-19 |
| அலகு 11.3 இலங்கையில் சமய, பண்பாட்டு மறுமலர்ச்சி | 20-24 |
| அலகு 11.4 பிரித்தானியரின் கீழ் இலங்கை அரசியல் | 25-28 |
| அலகு 11.5 பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக மாற்றங்கள் | 29-35 |
| அலகு 11.6 இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தல் | 36-41 |
| அலகு 11.7 உலகின் முக்கியமான புரட்சிகள் | 42-47 |
| அலகு 11.8 உலக மகா யுத்தங்களும் இணக்கப்பாடுகளும் | 48-57 |

# வரலாறு

# பாடத்திட்டம்

# தரம் 11

**2016 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது**

**சமூக விஞ்ஞானத்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**

# அறிமுகம்

நமது நாட்டின் தனித்துவத்தை அறிந்து, அதைப் பாதுகாத்து உலகின் நிலைமைகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய நாட்டுப்பற்றுள்ள, ஆற்றல் நிறைந்த இலங்கையரை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு பாடசாலைக் கலைதிட்டத்தில் கட்டாய பாடமாக 2007ம் ஆண்டில் இருந்து வரலாறு பாடம் பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்நோக்கத்தினை மேலும் அர்த்தமுள்ளதாகச் செயற்படுத்த 2015ம் ஆண்டிலிருந்து புதிய கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் தேசிய பொதுக்குறிக்கோள்கள் மற்றும் தேசிய பொதுத் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு ‘வரலாறு’ பாடத்திற்கு இனங்காணப்பட்ட 23 தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு 6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரையிலான ‘வரலாறு’ பாடக்கலைத்திட்டம் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட முறையின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

11 ஆம் தரத்திற்குரிய இப்பாடத்திட்டம் அம்முயற்சியின் ஒரு பெறுபேறாகும். 2016ம் ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள இப்பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் ஆறு தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு எட்டுக் கருப்பொருள்களின் கீழ் கட்டியெழுப்பபட்டுள்ளது. இலங்கையின் தனித்துவம், எமது அருஞ்செல்வங்கள் ஆகியன பற்றி விளங்கிக்கொள்வதற்கும் வரலாற்று ரீதியான பூகோளப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் பங்களிப்புச் செய்துள்ள விதத்தை இனங்காண்பதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்கு தனிநபருக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

i. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

ii. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

iii. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

iv. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

v. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

vi. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

vii. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

viii. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(I) தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

**(II) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**(III) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(IV) வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**(V) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**(VI) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்



**(VII) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

## வரலாறு - பாட நோக்கங்கள்

6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை கலைத்திட்டத்தினைக் கற்பதன் மூலம் கீழ்வரும் நோக்கங்களை மாணவர்கள் அடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. வரலாற்றுப் போக்கு, வளர்ச்சி என்பன பற்றி விளங்கி வரலாறெங்கிலும் இடம்பெற்ற மாற்றங்களைப் புரிந்து கொள்ளல்.
2. கடந்தகாலம் தொடர்பாகப் பயிலுவதால் பெறும் விளக்கத்தின் மூலம் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளலும் எதிர்கால நிலைமைகளைக் காணலும்.
3. தேசிய தனித்துவத்தினை இனங்கண்டு, தேசிய அருஞ்செல்வங்களைப் பாதுகாத்து நாட்டுப்பற்றுள்ள பிரசையாக உருவாதல்.
4. தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்குதல்.
5. ஏனைய கலாசாரங்களுக்கு மதிப்பளித்தல்.
6. கால ஒழுங்கு, மூலாதார உசாவுகை, காரண காரியத் தொடர்புகள் என்பன மூலம் கட்டி எழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான கல்வியறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துதல்.
7. முக்கிய வரலாற்று மாந்தர்களின் சரிதைகளை முன்மாதிரியாகக் கொள்ளல்.
8. வரலாற்று ரீதியான உலகப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறல்.
9. காலம், வெளி ஆகியன தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளல்.
10. வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்து கொள்ளல்.

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| வரலாற்று ரீதியான உலகின் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் செல்வாக்குச் செலுத்தி உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் வலிமையை ஏற்படுத்திக் கொள்வார். | 1.1 **கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கைப் பகுத்தாய்வார்.** | 1. **கைத்தொழிற் புரட்சி**<br>1.1 அறிமுகம்<br>1.2 கைத்தொழிற்புரட்சியின் ஆரம்பமும் அதன் வளர்ச்சியும்<br>1.3 கைத்தொழிற் புரட்சியின் மலர்ச்சி<br>1.4 கைத்தொழிற்புரட்சி இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய விதம் | • கைத்தொழிற் புரட்சி என்பதை விளக்குவார்.<br>• கைத்தொழிற்புரட்சியின் புத்தாக்கங்களை விவரிப்பார்.<br>• கைத்தொழிற் புரட்சியின் பரம்பலை விளக்குவார்.<br>• கைத்தொழிற் புரட்சியின் பெறுபேறுகளை விவரிப்பார்.<br>• கைத்தொழிற் புரட்சியை ஒரு பூகோளப் போக்காகப் பகுத்தாய்வார். | 08 |
| நாடொன்றில் வெளிநாட்டு ஆதிபத்தியம் கட்டியெழுப்பப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை மேலைத்தேசங்கள் இலங்கையில் அதிகாரத்தைத் தாபித்தமையூடாக நுணுகியாய்வார். | 2.1 **பிரித்தானியர் ஆட்சி இலங்கையில் தாபிதமானமையையும் அதன் தொழிற்பாட்டுத் தன்மையையும் பகுத்தாய்வார்.** | 2. **இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி**<br>2.1 பிரித்தானியர்கள் ஆசியாவுக்கு வருகை தந்ததின் பின்னணி<br>2.2 பிரித்தானியர் இலங்கைமீது கவனஞ் செலுத்தியமை<br>2.3 பிரித்தானியர் அதிகாரத்தை நிலைநாட்டுதல் (1796,1802,1815)<br>• தூதுப் பயணங்கள்<br>• 1796 ஆம் ஆண்டு கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றல்<br>• 1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றல் | • பிரித்தானியர்கள் ஆசியா மீது கவனஞ் செலுத்தியமைக்கான காரணங்களை விளக்குவார்.<br>• பிரித்தானியர்கள் இலங்கை மீது கவனஞ் செலுத்தியதற்கான காரணங்களை விளக்குவார்.<br>• பிரித்தானியர்கள் இலங்கையில் அதிகாரத்தை நிலைநிறுத்திய விதத்தை விளக்குவார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.2 பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராக எழுந்த சுதேச எதிர்ப்புக்களை எடுத்துக்காட்டுவார். | 2.4 வெளிநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டங்கள்<br>• 1818 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டம்<br>- ஏற்படுவதற்கு ஏதுவான காரணங்கள்<br>- தன்மை<br>- விளைவு<br>• 1848 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டம்<br>- ஏற்படுவதற்கு ஏதுவான காரணங்கள்<br>- தன்மை<br>- விளைவுகள் | • பிரித்தானியருக்கு எதிராக ஏற்பட்ட சுதேச எதிர்ப்புக்களைக் குறிப்பிடுவார்.<br>• சுதேச எதிர்ப்புக்களின் தன்மையையும் விளைவுகளையும் விளக்குவார். | |
| இலங்கையின் மகத்துவத்தைப் பேணுவதற்காகச் செயற்பட்ட தலைவர்களை மதித்து, அம்முன்மாதிரிகளை நடத்தையாக்கிக் கொள்வார். | 3.1 வெளிநாட்டுச் சக்திகளின் முன்னிலையில் தேசியத்தலைவர்கள் செயற்பட்ட விதத்தைப் பகுத்தாய்வார். | **3. இலங்கையின் தேசிய இயக்கம்**<br>3.1 தேசிய இயக்கத்தின் பின்னணி<br>3.2 சமய மறுமலர்ச்சி<br>• பௌத்த மறுமலர்ச்சி<br>• இந்து மறுமலர்ச்சி<br>• இஸ்லாமிய மறுமலர்ச்சி | • இலங்கையின் தேசிய இயக்கத்தின் பின்னணியை விவரிப்பார்.<br>• இலங்கையின் சமய, பண்பாட்டு மறுமலர்ச்சிக்குத் தோள் கொடுத்த தலைவர்களைக் குறிப்பிடுவார்.<br>• தேசியப் பிரச்சினைகளின்போது தலைவர்களின் பொறுப்புக்களை விளக்குவார். | 07 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| தேசிய இயக்கத்தின் ஊடாக, தேசிய ஒருமைப்பாட்டையும் தேசிய ஒற்றுமையையும் பேணுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார். | **4.1 அரசியலமைப்பு வளர்ச்சியையும் தேசிய இயக்கத்தையும் பகுத்தாய்வார்.** | **4. பிரித்தானியர்களின்கீழ் இலங்கையில் அரசியல் மாற்றங்கள்**<br>4.1 கோல்புரூக் சீர்த்திருத்தங்கள்<br>4.2 1910 ஆம் ஆண்டு சீர்த்திருத்தங்களும் பின்னணியும்<br>4.3 டொனமூர் அரசியலமைப்பு<br>4.4 சுதந்திர ஆர்ப்பாட்டங்கள்<br>• இடதுசாரி இயக்கமும் சூரியமல் இயக்கமும்<br>• அமைச்சரவையும் தேசிய சங்கமும்<br>• சோல்பரி அரசியலமைப்பு | • கோல்புரூக் தொடக்கம் சோல்பரி வரை பிரித்தானி யரின் கீழ் அரசியலமைப்பின் வளர்ச்சியை விளக்குவார்.<br>• மதுவொழிப்பு இயக்கத்தினதும் தேசிய இயக்கத்தினதும் எழுச்சியை விவரிப்பார்.<br>• தேசிய இயக்கத்தின் ஆரம்பக் கட்டத்தில் தேசியத் தலைவர்களின் ஒற்றுமையை விவரிப்பார்.<br>• தேசிய ஒற்றுமையைப் பேணுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவார். | 10 |
| புறவாரிப் பண்பாட்டுக் கோலங்கள், சுதேச சமூகக் கட்டமைப்புடன் இசைவடைந்த விதத்தைப் பகுத்தாய்வார். | **5.1 பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இலங்கைச் சமூகத்தை இணைத்துக் கொண்ட புத்தாம்சங்களை எடுத்துக் காட்டுவார்.** | **5. பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக மாற்றம்**<br>5.1 அறிமுகம்<br>5.2 பொருளாதார மாற்றங்கள்<br>• கோல்புரூக் ஆணைக்குழுவின் பொருளாதார சீர்த்திருத்தங்கள்<br>• சீர்த்திருத்தங்களின் செல்வாக்குகள்<br>5.3 சமூக மாற்றங்கள்<br>• சமூக<br>• பண்பாட்டு<br>5.4 பிரித்தானியரின் ஆட்சி காரணமாக கிடைத்த பயன்மிக்க அம்சங்கள்<br>5.5 பாதகமான அம்சங்கள் | • பிரித்தானியரின் கீழ் இலங்கையின் பொருளாதார மாற்றங்களை விளக்குவார்.<br>• பிரித்தானியரின்கீழ் இலங்கையின் சமூக, பண்பாட்டு மாற்றங்களை விளக்குவார்.<br>• பிரித்தானியரது ஆட்சியின் கீழ் இலங்கைச் சமூகத்துடன் இணைந்த சாதகமான, பாதகமான அம்சங்களை எடுத்துக் காட்டுவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| சுதந்திரம் கிடைத்த பின்னர் இலங்கையின் அபிவிருத்திச் செய் முறையை விசாரித்த றிவார். | **6.1 சுதந்திரம் கிடைத்த பின்னர் இலங்கையின் அரசியல் நிலைமை யைப் பகுத்தாய்வார்.** | **6. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தல்**<br>6.1.1 சோல்பரி சீர்திருத்தங்களும் சுதந்திரம் கிடைத்தலும்<br>- 1956ம் ஆண்டு சமூக மாற்றம்<br>- 1972 இல் இலங்கை குடியரசாதல்<br>- 1978ம் ஆண்டு புதிய அரசிய லமைப்பு | • சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் அதிகாரந் தாபிக்கப்பட்டமையை விளக்கு வார்.<br>• சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் அரசியலமைப்பு மறுசீரமைப்புக்களை விளக்கு வார். | 16 |
| | **6.2 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபி விருத்தி உத்திகளை யும் அவற்றின் வினைத்திறனையும் பகுத்தாய்வார்.** | 6.2 சுதந்திரத்தின் பின் அபிவிருத்தி நடவடிக்கைகள்<br>- நீர்ப்பாசனமும் விவசாயமும்<br>- விவசாயக் கொள்கை<br>- கல்வி | • சுதந்திரத்தின் பின் இலங்கை யின் அபிவிருத்தி நடவடிக்கை களை விளக்குவார்.<br>• அபிவிருத்தி நடவடிக்கைகளின் விளைதிறனை எடுத்துக் காட்டு வார். | |
| | | 6.3 சமூக நலனோம்பல் | • சமூக நலனோம்பல் என்றால் என்ன என விளக்குவார்.<br>• சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் நடைமுறையில் இருந்த நலனோம்பல் வேலைத் திட்டங்களை விவரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 7.0 வரலாற்று ரீதியான பூகோள, பிராந்திய அரசியல் போக்குகளின் முன்மாதிரிகளைப் பிரதியீடு செய்துகொள்வார். | 7.1 **கூட்டாகச் செயற்படுவதால் தமது உரிமைகளை வென்றெடுக்கலாமென்பதை அமெரிக்கப் புரட்சியின் துணையுடன் விவரிப்பார்.** | **7. உலகின் தெள்ளத்தெளிவான புரட்சிகளும் தேசிய இயக்கங்களும்**<br>7.1 அமெரிக்கப்புரட்சி<br>- அறிமுகம்<br>- செல்வாக்குச் செலுத்திய காரணிகள்<br>- விளைவுகள் | • அமெரிக்கப் புரட்சியை விளக்குவார்.<br>• அமெரிக்கச் சுதந்திரப் போராட்டம் உலக வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் விதத்தை எடுத்துக்காட்டுவார். | 10 |
| | 7.2 **அடிப்படையான மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பிரான்சியர்கள் முன்னெடுத்த போராட்டத்தை விவரிப்பார்.** | 7.2 பிரான்சியப்புரட்சி<br>- அறிமுகம்<br>- செல்வாக்குச் செலுத்திய காரணிகள்<br>- விளைவுகள் | • பிரான்சியப் புரட்சியை விவரிப்பார்.<br>• புரட்சி மூலம் வென்றெடுத்த அடிப்படை மனித உரிமைகளை எடுத்துக்காட்டுவார். | |
| | 7.3 **சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்காக முன்னெடுக்கப்பட்ட ரஷ்யப்புரட்சியை விளக்குவார்.** | 7.3 ரஷ்யப்புரட்சி<br>- அறிமுகம்<br>- செல்வாக்குச் செலுத்திய காரணிகள்<br>- விளைவுகள் | • ரஷ்யப் புரட்சியை விளக்குவார்.<br>• புரட்சி மூலம் வென்றெடுத்த சோசலிச எண்ணக்கருக்களை விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 8.0 தற்கால உலகில் அரசியல் முரண்பாடுகளின் தன்மை பற்றி விசாரணை செய்து, அவ்வாறான முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வார். | **8.1 அதிகாரம் தொடர்பாக ஏற்படும் பரஸ்பர முரண்பாடுகளின் அழிவுபூர்வத் தன்மையை விசாரித்தறிவார்.** | **8. உலக மகா யுத்தங்களும் இணக்கப்பாடுகளும்**<br>8.1.1 முதலாம் உலக மகாயுத்தம்<br>8.1.2 சர்வதேச சங்கம்<br>8.1.3 இரண்டாம் உலக மகாயுத்தம் | • உலக மகா யுத்தங்கள் என்பது யாது என விளக்குவார்.<br>• உலக மகாயுத்தங்களுக்கான காரணங்களை விவரிப்பார்.<br>• உலக மகாயுத்தங்களின் அழிவுகளை எடுத்துக்காட்டுவார். | 12 |
| | **8.2 முரண்பாடு தீர்த்தலின் போது சர்வதேச இணக்கப்பாட்டைப் பகுப்பாய்வு செய்வார்.** | 8.2 ஐக்கிய நாடுகள் அமைப்பு | • ஐக்கிய நாடுகள் அமைப்பு என்பதை விளக்குவார்.<br>• உலக சமாதானத்தைப் பேணுவதில், ஐக்கிய நாடுகள் அமைப்பின் பங்களிப்பை எடுத்துக் காட்டுவார்.<br>• தற்கால உலக சமாதானத்துக்காக ஐக்கியநாடுகள் அமைப்பு, எடுக்கத்தக்க நடவடிக்கைகளைச் சுட்டிக் காட்டுவார். | |

# கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள்

# அலகு 1 கைத்தொழிற் புரட்சி

மனிதன் தனது கைத்திறன்களைக் கொண்டு செய்த பண்ட உற்பத்தியின் விளைதிறனை அதிகரிப்பதற்காக இயந்திரங்களைக் கண்டு பிடித்து, கைத்தொழில் மற்றும் தொழினுட்பத்துறையில் ஏற்படுத்திய காத்திரமான மாற்றமே கைத்தொழிற் புரட்சி ஆகும் எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

அது வரையில் சிற்றளவில் மாத்திரமே இடம்பெற்ற பண்ட உற்பத்தி, இயந்திரங்களின் துணையுடன் பாரிய அளவில் உற்பத்தி செய்யப்பட்டமை இம்மாற்றத்தின் ஒரு சிறப்பியல்பாகும். இங்கிலாந்து நாட்டை முதன்மையாகக் கொண்டு ஐரோப்பாவில் ஆரம்பித்த இத்தொழினுட்ப மாற்றம் பிற்காலத்தில் ஏனைய கண்டங்களை நோக்கியும் விரிவடைந்து சென்றது. உலகின், பொருளாதார, சமூக அரசியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதில் கைத்தொழிற்புரட்சி செல்வாக்குச் செலுத்தியது. அதனால் சாதகமான விளைவுகளும் பாதகமான விளைவுகளும் ஏற்பட்டன. கைத்தொழிற்புரட்சியின் ஆரம்பமும் தன்மையும் வளர்ச்சியும் மற்றும் கைத்தொழிற் புரட்சியின் விளைவுகள் ஆகியன குறித்து இங்கு கவனஞ் செலுத்தப்படுகின்றது.

**தேர்ச்சி 1.0** : வரலாற்று ரீதியான உலகின் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் செல்வாக்குச் செலுத்தி உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் வலிமையை ஏற்படுத்திக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற்பேறுகள்** :

- கைத்தொழிற் புரட்சி என்பதை விளக்குவார்.
- கைத்தொழிற்புரட்சியின் புத்தாக்கங்களை விவரிப்பார்.
- கைத்தொழிற் புரட்சியின் பரம்பலை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

11.1 கைத்தொழிற் புரட்சி

1.1 அறிமுகம்

- மனிதன் தனது கைத்திறன்களைக் கொண்டு செய்த பண்ட உற்பத்தியின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக இயந்திரங்களைக் கண்டுபிடித்து, குறுகிய காலத்தில் கைத்தொழில் மற்றும் தொழினுட்பத்துறையில் ஏற்படுத்திய காத்திரமான மாற்றமே கைத்தொழிற் புரட்சி எனப்படுகின்றது.

- பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு,
  கைத்தொழிற்புரட்சி இங்கிலாந்து நாட்டில் ஆரம்பமாகியமை, அதன் மீது பங்களிப்புச் செய்த காரணங்கள், கைத்தொழிற்புரட்சி காரணமாகப் பல்வேறு துறைகளில் குறுகிய காலத்துள் ஏற்பட்ட மாற்றங்கள், கைத்தொழில் மற்றும் தொழினுட்ப விருத்தியின் விரிவாக்கமும் அதன் விளைவுகளும், இலங்கை மீது கைத்தொழிற்புரட்சியின் செல்வாக்கு ஆகியவற்றை விளக்குக.

1.2 கைத்தொழிற்புரட்சியின் ஆரம்பமும் வளர்ச்சியும்

- 18 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி ஆரம்பமாதல்
- ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் கழியும் வரையில் கைத்தொழிற்புரட்சி இங்கிலாந்துக்கு மாத்திரம் வரையறைப்பட்டிருந்ததெனினும் 19 ஆம் நூற்றாண்டாகும் போது ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுக்கும் உலகின் ஏனைய கண்டங்களுக்கும் அது வியாபித்தது.
- கைத்தொழிற்புரட்சி பிரித்தானியாவில் ஆரம்பித்தமைக்குக் காரணங்கள்
  - பிரித்தானியாவில் காணப்பட்ட அரசியல் உறுதிநிலை
  - நிலமானிய முறையின் வீழ்ச்சி
  - மனப்பாங்குகளும் புதிய கருத்துக்களும் பிரபல்யமடைந்தமை
  - பண முதலீடு செய்யும் ஆற்றல் கொண்ட செல்வந்தர்கள் பலர் காணப்பட்டமை
  - விருத்தியடைந்த வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தோற்றம் பெற்றமை
  - மூலப்பொருள்களை இலகுவாகப் பெறத்தக்கதாக இருந்தமை
  - போக்குவரத்து வசதிகள் விருத்தியடைந்தமை
  - குடியேற்ற நாடுகள் அதிகரித்தமையும் வியாபாரம் வளர்ச்சியடைந்தமையும்
  - குடிசனத்தொகை (Population) அதிகரித்தமை

1.3 கைத்தொழிற்புரட்சியின் வளர்ச்சி

- கைத்தொழிற்புரட்சி, பிரதானமாக மூன்று துறைகளின் வழியே வளர்ச்சிடைந்தது.
  - நெசவுக் கைத்தொழில்
  - நிலக்கரிக் கைத்தொழில்
  - இரும்புக் கைத்தொழில்
- இத்துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி, படிப்படியாக போக்குவரத்து, தொடர்பாடல், விவசாயம் ஆகிய துறைகளிலும் விசாலித்தது.

- **நெசவுக் கைத்தொழில்**
  - கைத்தொழிற் புரட்சிக்கு முன்னர், வீடுகளில் குடிசைக் கைத்தொழிலாகவே புடைவை உற்பத்தி இடம்பெற்றது.
  - கைத்தொழிற் புரட்சியின் அபிவிருத்தி காரணமாகப் பொறிகள், இயந்திரங்களைப் பயன்படுத்திப் பாரிய அளவில் புடைவை உற்பத்தியை அதிகரிக்கத்தக்க வகையில் உற்பத்தி நடவடிக்கைகள் விருத்தியடைந்தன.
- அதற்குத் துணையாக அமைந்த புதிய கண்டுபிடிப்புக்கள்
  - 1733 ஆம் ஆண்டில் இல் ஜோன் கே என்பவரால் நூனாழி (பறக்கும் தறி ஒடம்) உற்பத்தி செய்யப்பட்டமை
  - எலியஸ் கேவே என்பார் புடைவை தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தமை.

- ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ் என்பார் ஜெனி (jenny) இயந்திரத்தைக் கண்டுபிடித்தமை
- ரிச்சட் ஆர்த்ரைற் என்பவரின் நூல் நூற்கும் இயந்திரம்
- புதிய இயந்திரங்கள், பொறிகள் பல்வேறு புடைவை வடிவமைப்புக்கள் (Designs) என்பனவற்றில் விருத்தியடைந்த நெசவுக் கைத்தொழிலின் வளர்ச்சி இன்றுவரையில் பல்வேறு கண்டுபிடிப்புக்களின் வழியே தொடர்கின்றமை.

- **இரும்பு, உருக்குக் கைத்தொழில்**
    - நெசவுக் கைத்தொழிலின் அளவுக்கு துரிதமாக வளர்ச்சியடையாத போதிலும் பிரித்தானியாவின் கைத்தொழில் மயமாதலுக்கு இது துணையாக அமைந்தமை.
    - பிரித்தானியா இரும்புத் தாதுப்படிவுகள் பெருமளவில் காணப்படும் ஒரு நாடாக இருத்தல்.
    - கைத்தொழிற் புரட்சிக்கு முன்னரும் பிரித்தானியாவில் இரும்பு உருக்கு உற்பத்தி காணப்பட்டமையும் அவை ஆயுதங்கள் வீட்டுத் தளபாடங்கள் விவசாய உபகரணங்கள் பேன்றவற்றை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டமையும்.

- இரும்புத்தாது உருக்குவதற்காக விறகு பயன்படுத்தப்பட்டு வந்தமை
- இரும்புத்தாது உருக்குவதற்காக புதியமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டமை
    - ஏபிரகாம் டர்பி என்பவர் இரும்புத்தாதை உருக்குவதற்கு நிலக்கரியைப் பயன்படுத்தியமையும் வார்ப்பிரும்பு உற்பத்தி செய்தமையும்
    - ஹென்ரி கோட் என்பவரால் உற்பத்தி செய்யப்பட்ட உருளை (ரோவர்) இயந்திரத்தினால் பதப்படுத்திய இரும்பு உற்பத்தி செய்யப்பட்டமை
    - ஹென்ரி பெஸமர் என்பவர், இரும்புத் தாதுவிலிருந்து கழிவுப்பொருள்களை அப்புறப்படுத்தி உருக்கு உற்பத்தி செய்யத்தக்க உலையைக் கண்டுபிடித்தமை
    - திறந்த உலை முறையில் உயர்தர உருக்கு உற்பத்தி செய்யப்பட்டமை
    - விலியம் சீமன்ஸ் என்பாரால் இரும்புத்தாதை உருக்குவதற்காக மின் உலை உற்பத்தி செய்யப்பட்டமை
    - உருக்குத் தொழிலுடன் ஆரம்பித்த கண்டுபிடிப்புக்கள் இன்று வரையில் தொடர்ந்த வண்ணமுள்ளன.

- **நிலக்கரிக் கைத்தொழில் (வலுசக்தி)**
    - பிரித்தானியா நிலக்கரி, கனியங்கள் ஆகிய இயற்கை வளங்கள் பெருமளவில் காணப்படும் ஒரு நாடாக இருத்தல்
    - கைத்தொழிற் புரட்சியுடன் கூடவே நிலக்கரிக்கான கேள்வி அதிகரித்தமை
    - மலிவான, வினைத்திறனுள்ள ஒரு வலுசக்தி மூலமாக நிலக்கரி பிரபல்யமடைந்தமை
    - எனினும் நிலக்கரி அகழ்வு ஒரு கடினமான வேலையாக அமைந்தமை
        - நிலக்கரிச் சுரங்கத்தினுள் ஒன்றுசேரும் நீரை வெளியேற்றுதல் கடினாக அமைந்தமை
        - நிலக்கரிச் சுரங்கங்களின் அடிப்பகுதியில் நச்சு வாயுக்களின் அளவும் வெப்பநிலையும் உயர்வாகக் காணப்பட்டமை

- மேற்படி இடர்ப்பாடுகளை நிவர்த்திப்பதற்கான புதிய கண்டுபிடிப்புக்கள்:
    - நியுகொமன் என்பாரால் நிலக்கரிச் சுரங்கங்களில் ஒன்று சேரும் நீரை வெளியேற்றும் முறையும் குழாய்கள் மூலம் குளிரான வளியைச் சுரங்கங்களினுள் அனுப்பும் முறையும் கண்டுபிடிக்கப்பட்டமை
    - ஜேம்ஸ் வோட் என்பவரினால் கொதிநீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது.

- ஹம்ப்ரி டேவி என்பாரால் பாதுகாப்பான விளக்கு கண்டுபிடிக்கப்பட்டது.
- நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து இரும்பு வடங்களின் துணையுடன் நிலக்கரியை வெளியே கொண்டு வரும் முறை கண்டுபிடிக்கப்பட்டமை
- நிலக்கரிக் கைத்தொழிலின் பக்க விளைவுகளாக பல்வேறு கைத்தொழில்கள் தோற்றம் பெற்றமையால் இக்கைத்தொழில் மேலும் வளர்ச்சிடைந்தமை
  உதாரணம்:
  - பாதைகள் அமைப்பதற்கு நிலக்கரித் தார் பயன்படுத்தப்பட்டமை, புடைவைச் சாய வகைகள் உற்பத்தி செய்யப்பட்டமை, மருந்துவகை அழகு சாதனப் பொருள்கள், எண்ணெய், பசளை வகைகள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டமை
- தற்காலத்திலும் இக்கைத்தொழில் இடம்பெறுவதோடு புதுப்புது கண்டுபிடிப்புக்களும் வெளிவந்தவண்ணமுள்ளன.

**கைத்தொழிற்புரட்சியின் விரிவு**

- கைத்தொழிற் புரட்சியின் விரிவு இரண்டு வழிகளினூடாக நிகழ்கின்றமை
  - வேறு துறைகளில் விரிவடைதல்
  - வேறு நாடுகளில் விரிவடைதல்

- **வேறு துறைகளின் விரிவடைதல்**
  விவசாயம் போக்குவரத்து, தொடர்பாடல் ஆகிய துறைகளில் விரிவடைந்துள்ளமை
  - விவசாயத்துறையில் விரிவடைதல்
    - பல்வேறு பொறிகள்/ இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றமை
    - பாரிய அளவிலான பயிர் நிலங்கள்/ பண்ணைகள்
    - சுழற்சிப் பயிர்ச்செய்கை
    - விலங்கு (கால்நடை) வளர்ப்புக்காக புதிய தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்துதல்
    - அதிக அளவு விளைபொருள் பெறத்தக்க புதிய முறைகள் குறித்து ஆராய்ச்சி நடத்துதல்
    - இத்துறையின் வளர்ச்சியானது தற்காலத்திலும் நிகழ்ந்தவண்ணமுள்ள இடையறாத ஒரு செயன்முறையாகும்.

- **போக்குவரத்துத்துறையின் வளர்ச்சி**
  - தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள்களையும், சந்தைக்கு உற்பத்திப் பொருள்களையும் கொண்டு செல்ல நேர்ந்தமையால் போக்குவரத்துத்துறை மீது கைத்தொழில் துறை பங்களிப்புச் செய்தமை
  - இதற்காகப் புதிய இயந்திர உபகரணங்களும் பாதைத் தொகுதிகளும் தேவைப்பட்டமை
  - அதற்கமைய பிரித்தானியாவில் பாதைகளும் போக்குவரத்துக் கால்வாய்களும் புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டமை
  - தனியார்துறைத் தொழில் முயற்சியாளர்கள், பணம் முதலீடு செய்தமை
  - போக்குவரத்துத்துறையில் புதிய கண்டுபிடிப்புக்கள்
    - ஜோன் மக்கடம் என்பாரால் கண்டுபிடிக்கப்பட்ட **மக்கடம் பாதை** முறை
    - ரொபட் ∴புல்ரன் என்பாரால் கண்டுபிடிக்கப்பட்ட புகைப்படகு
    - ஹென்றி பெல் என்பரால் கண்டுபிடிக்கப்பட்ட புகைக்கப்பல்
    - ஜோர்ஜ் ஸ்டிவென்சன் என்பரால் கண்டுபிடிக்கப்பட்ட கொதிநீராவி வலுவினால் தொழிற்படும் புகையிரத இயந்திரம்

- டெம்லர் என்பாரினால் தயாரிக்கப்பட்ட மோட்டார் கார்
    - ரைற் சகோதரர்களால் தயாரிக்கப்பட்ட ஆகாய விமானம்
  - இவ்வாறாக நிலம், நீர், வான் ஆகியவற்றையெல்லாம் வெற்றி கொண்டு போக்குவரத்துத்துறை வளர்ச்சியடைந்ததுடன் தற்போதும் அது தொடர்ந்தும் விருத்தியடைந்தவண்ணமுள்ளது.

- **தொடர்பாடல் துறையின் வளர்ச்சி**
  - தொடர்பாடல் துறையிலும் துரித வளர்ச்சி ஏற்பட்டமை
  - உலகின் எந்தவொரு நாட்டுக்கும் ஒரு பென்சு செலவில் கடிதமொன்றினைக் கொண்டு செல்லத்தக்க அஞ்சற்சேவை
  - சாமுவேல் மோர்ஸ் என்பவரால் அமைக்கப்பட்ட தந்தி முறை
  - கிரகம் பெல் என்பவரால் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டமை
    மனிதக் குரலைக் கம்பி வழியே கொண்டு செல்லத்தக்க ஒரு முறை
  - குக்லி மார்க்கோனியின் வானொலி அலைகள் மூலம் செய்தி அனுப்பும் முறை
  - ஜோன் லொகி பெயாட் என்பார் தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தமை
  - தொடர்பாடல் துறையானது தற்காலத்தில் பல்வேறு தொழினுட்ப சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையின் விளைவாக பாரிய அபிவிருத்தி கண்டுள்ளதோடு தொடர்ந்தும் அபிவிருத்தியடைந்து வருகின்றமை.

- **ஏனைய நாடுகளில் பரவுதல்**
  - இங்கிலாந்தில் ஆரம்பித்த கைத்தொழிற்புரட்சி, மிகத்துரிதமாக ஐரோப்பாக்கண்டத்தின் ஏனைய நாடுகளிலும் ஆசியாக்கண்டத்திலும் வியாபித்துள்ளது.
  - பத்தொன்பதாம் நூற்றாண்டாகும்போது பிரான்சு, ஜேர்மனி ஆகிய நாடுகளில் மூலப்பொருள்களும் மற்றும் சந்தை வசதியும் காணப்பட்ட பிரதேசங்களில் கைத்தொழில்கள் ஆரம்பமாயின.
  - பெல்ஜியம் நாட்டில் வொலேனியா, ஜேர்மனி நாட்டில் சைலூஷியா பிரதேசங்கள் இரும்பு உற்பத்திக்கு பிரசித்தி பெற்று விளங்கின.
  - சுவிற்சலாந்து, ஜேர்மனியின் தென்பகுதி என்பன பருத்திப் புடவை உற்பத்தியில் பிரபல்யம் அடைந்தன.
  - பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெல்ஜியம், அவுஸ்திரியா, ஹங்கேரி, பிரஷியா ஆகிய ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்க ஐக்கியக் குடியரசிலும் ஆசிய நாடுகளுள் ஒன்றாகிய யப்பானிலும் கைத்தொழில் புரட்சி பரவியது.
  - பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏனைய நாடுகளிலும் கைத்தொழில் மயமாக்கம் பரவியமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்
    - உலகெங்கும் குடிசனத்தொகை துரிதமாக வளர்ச்சியடைந்தமையால் பண்டங்களுக்கான கேள்வி அதிகரித்தமை
    - ஐரோப்பாக்கண்டத்தில் ஆட்போக்குவரத்தும் பண்டப் போக்குவரத்தும் வளர்ச்சியடைந்தமை
    - பிரான்சு, ஜேர்மனி ஆகிய நாடுகளில் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டமை

**மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்கும் வகையில் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள செயற்பாடுகளை மாணவர்களைக் கொண்டு செய்வியுங்கள்.**

- இவற்றைத் தனியாட் செயற்பாடுகளாக வழங்குக.
- அந்தந்தச் செயற்பாட்டுக்காகப் போதுமான நேர கால அவகாசம் வழங்குக.
- தேவையான வழிகாட்டல்களை வழங்குக.

- ஒவ்வொரு செயற்பாட்டையும் மதிப்பிடுக.

வகுப்பு மாணவர் தொகை அதிகமாயின் விடைகளைக் கலந்துரையாடுக.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 1
- கைத்தொழிற் புரட்சி தொடர்பான விடயங்களடங்கிய நூல்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்காகத் தரப்பட்டுள்ள தலைப்புக்கள் தொடர்பாக மாணவரின் பாட அறிவு, குறித்த பாட விடய உள்ளடக்கம் தொடர்பாக மாணவரின் மனப்பாங்குகள். மாணவருக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளைச் சரியாகச் செய்யும் திறன்

  உதாரணம்: கட்டுரை எழுதுதல், செய்தித்தாளுக்குக் கட்டுரை எழுதுதல், தேசப்படத்தில் குறித்தல் போன்றவை
- செயற்பாட்டை ஆக்கபூர்வமாகவும் நேர்த்தியாகவும் செய்தல், குறித்த நேர வரையறையினுள் நிறைவு செய்து ஒப்படைத்தல் போன்ற தன்மைகள் அளக்கத்தக்க வாறாக நியமங்களைத் தயாரித்துப் புள்ளி வழங்குக.
- ஒவ்வொரு செயற்பாட்டுக்காவும் மேலே தரப்பட்ட அறிவுறுத்தல்களின்படி கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகளைத் தயாரித்துக் கொள்க.

## தரவிருத்தி உள்ளீடுகள்

### இணைப்பு 1

**செயற்பாடு:**

1. கைத்தொழிற் புரட்சி எனும் இப்பாடத்துக்குப் பொருத்தமான குறு வினாக்களடங்கிய வினாப்புத்தகமொன்று தயாரித்தல் (இதற்காக ஒரு வார கால அவகாசம் வழங்கலாம்.)

2. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   - கைத்தொழிற் புரட்சியை விளக்கி, அது பிரித்தானியாவில் ஆரம்பமாகியமைக்கான காரணங்களை ஐந்து விடயங்களைத் துணையாகக் கொண்டு தெளிவுபடுத்துக.
   - நெசவுத் தொழிலில் ஏற்பட்ட புரட்சியை பின்வரும் தலைப்புக்களின் கீழ் விளக்குக.
     - நெசவுத் தொழில் இயந்திர மயமாகியமைக்கான காரணங்கள்
     - நெசவுத் தொழிலில் புதிய கண்டுபிடிப்புக்களும் அவற்றின் மூலம் கிடைத்த பயன்களும்
     - நெசவுத் தொழிலின் கைத்தொழில் மயமாக்கலானது இடையறாது நிகழ்ந்த வண்ணமுள்ளமை
   - இரும்பு - உருக்குக் கைத்தொழிலில் ஏற்பட்ட புரட்சியைப் பின்வரும் தலைப்புக்களின்கீழ் விளக்குக.
     - இரும்பு - உருக்குத் தொழில் கைத்தொழில் மயமாகியமைக்கான காரணங்கள்
     - இரும்பு - உருக்குத் தொழிலின் புதிய கண்டுபிடிப்புக்களும் அவற்றின் மூலம் கிடைத்த பயன்களும்
     - இரும்பு - உருக்குத் தொழிலின் கைத்தொழில் மயமாக்கலானது இடையறாது நிகழ்ந்த வண்ணமுள்ளமை
   - நிலக்கரிக் கைத்தொழிலில் ஏற்பட்ட புரட்சியைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் விளக்குக.
     - நிலக்கரித் தொழில் கைத்தொழில் மயமாகியமைக்கான காரணங்கள்
     - நிலக்கரித் தொழிலில் புதிய கண்டுபிடிப்புக்களும் அவற்றின் மூலம் கிடைத்த பயன்களும்
     - நிலக்கரித் தொழிலின் கைத்தொழில் மயமாக்கலானது இடையறாது நிகழ்ந்த வண்ணமுள்ளமை

3. கைத்தொழிற்புரட்சி தொடர்பாக பின்வரும் தலைப்புக்களின்கீழ் செய்தித்தாளொன்றில் வெளியிடுவதற்குப் பொருத்தமானவாறு கட்டுரைகள் தயாரிக்குக.
   - தொடர்பாடல் துறையின் அபிவிருத்தி இடையறாத ஒரு செய்முறையாகும்.
   - தொடர்பாடல் துறையின் வளர்ச்சி - அன்றும் இன்றும்
   - போக்குவரத்துறையின் வளர்ச்சி - அன்றும் இன்றும்
   - விவசாயத்துறையின் வளர்ச்சி - அன்றும் இன்றும்

4. கைத்தொழிற்புரட்சி ஆரம்பித்து வியாபித்த பின்வரும் நாடுகளை உலகப் புறவுருவப் படமொன்றில் குறித்துப் பெயரிடுக.
   - இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்சு, சுவிட்சலாந்து, பெல்ஜியம், ஆஸ்திரியா, ஹங்கேரி, ரஷியா, அமெரிக்க ஐக்கியக் குடியரசு, யப்பான்

**தேர்ச்சி 2.0** : வரலாற்று ரீதியான உலகின் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் செல்வாக்குச் செலுத்தி, உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் வலிமையை ஏற்படுத்திக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற்பேறுகள்** :

- கைத்தொழிற் புரட்சியின் பெறுபேறுகளை விவரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**கைத்தொழிற் புரட்சியின் விளைவுகள்**

- கைத்தொழிற் புரட்சி காரணமாக அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் பற்பல மாற்றங்கள் ஏற்பட்டமை
- உலகெங்கும் ஏற்பட்ட இம்மாற்றங்கள் சாதகமான இயல்புகளோடு பாதமான இயல்புகளையும் கொண்டுள்ளன.
    - அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்
        - முதலாளி வர்க்கத்தினரும் பாட்டாளி வர்க்கத்தினரும் தோன்றியமை
        - பல்வேறு அரசியல் தத்துவங்கள் தோன்றியமை
          உதாரணம்: பொதுவுடமை வாதம், தாராண்மை வாதம்
        - குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றும் போட்டி உருவாகியமை
        - தொழிலாளர் ஆர்பாட்டங்களும் தொழிற் சங்கங்கள் தோன்றியமையும்
    - பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்
        - கைத்தொழில் உற்பத்தி விரிவடைந்தமை
        - வணிக வகுப்பினரும் தொழிற்சாலை உரிமையாளர்களான முதலாளித்துவ வகுப்பினரும் உருவாகியமை
        - முதலாளித்துவப் பொருளாதார முறை உருவாகியமை
        - சம்பளத்தை நம்பி வாழ்வோர் தோற்றம் பெற்றமை
        - வங்கி நடவடிக்கைகளும் காப்புறுதி முறைகளும் விருத்தியடைந்தமை
        - இணைந்த வணிகங்கள் தோற்றம் பெற்றமை
        - இறக்குமதி, ஏற்றுமதி வணிகம் விருத்தியடைந்தமை
    - சமூகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்
        - நகரங்கள் தோற்றம் பெற்றமையும் நகரங்களில் சனப்பெருக்கம் ஏற்பட்டமையும்
        - சமூக வகுப்பு வேறுபாடு கொண்ட சமூகம் தோற்றம் பெற்றமை
        - தொழிலாளர் நலனோம்பல் முறை விருத்தியடைந்தமை
        - சுற்றாடல் மாசடைதல்

**மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்கும் வகையில் பின்வரும் வினாக்களுக்கு விடையெழுதச் செய்க.**

- இவற்றைத் தனியாட் செயற்பாடுகளாக வழங்குக.
- இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- வகுப்பறையில் இருந்தவாறே விடையளிக்கச் செய்க.
- மாணவரது விடைகளை மதிப்பிடுக.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 1

1. கைத்தொழிற் புரட்சி காரணமாக அரசியல் துறையில் ஏற்பட்ட மூன்று மாற்றங்களைக் குறிப்பிடுக.
2. பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மூன்று மாற்றங்களைக் குறிப்பிடுக.
3. சமூகத்துறையில் ஏற்பட்ட மூன்று மாற்றங்களைக் குறிப்பிடுக.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

- கைத்தொழில் மயமாக்கத்தின் விளைவுகளைக் குறிப்பிடுவார்.
- வினாக்களுக்குச் சரியாக விடையளிப்பார்.
- கைத்தொழில் மயமாக்கத்தின் சாதகமான விளைவுகளை மதிப்பிடுவார்.
- குறித்த நேரவரையறையுள் வேலைகளைப் பூர்த்தி செய்வார்.
- ஒத்துழைத்துச் செயற்படுவார்.

**தேர்ச்சி 2.0** : வரலாற்று ரீதியான உலகின் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் செல்வாக்குச் செலுத்தி உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் வலிமையை ஏற்படுத்திக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** : 01

**கற்றற்பேறுகள்** :

- கைத்தொழிற் புரட்சி ஒரு பூகோளப் போக்காகும் எனப்பகுத்தாய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

- இலங்கை மீது கைத்தொழிற் புரட்சியின் செல்வாக்கு
  - இலங்கை பிரித்தானியரின் ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்டமையால் கைத்தொழிற் புரட்சியின் செல்வாக்கு இந்நாட்டிலும் ஏற்பட்டமை
    - பாரிய அளவிலான பயிர் நிலங்கள் - பெருந்தோட்டச் செய்கை வியாபித்தமை
    - கைத்தொழில்களும் அவற்றில் பல்வேறு பொறிகள் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டமையும்
    - தோட்ட உரிமையாளர்கள் தனவந்தர்களானமை
    - சம்பளத்துக்கு வேலை செய்யும் தொழிலாளர் வர்க்கம் தோன்றியமை
    - அஞ்சல் சேவை ஆரம்பிக்கப்பட்டமை
    - பாதைகளும் புகையிரதப்பாதைகளும் அமைக்கப்பட்டமை
    - வங்கி முறை ஆரம்பிக்கப்பட்டமை

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- செயற்பாட்டுக்குப் பொருத்தமானவாறு தயாரித்துக் கொள்க.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- செயற்பாட்டுக்குப் பொருத்தமானவாறும் கற்றற்பேறுகளை அளக்கத்தக்க வகையிலும் நியமங்களைத் தயாரித்து கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

## அலகு 11.2 இலங்கையில் பிரித்தானியர் அதிகாரம் தாபிக்கப்படல்

வணிகத்தை விருத்தி செய்தல், குடியேற்ற நாடுகளைத் தோற்றுவித்தல், சமயத்தைப்பரப்புதல் போன்ற நோக்கங்களை முதன்மையாகக் கொண்டு ஐரோப்பியர்கள் கீழைத்தேயத்தை நாடிவந்தனர்.

கி.பி. 1796 ஆம் ஆண்டில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தர்களிடமிருந்து கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் 1815 ஆம் ஆண்டில் முழு நாட்டையும் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்தனர். இலங்கையில் தமது ஆதிக்கத்தைப் பரப்புவதற்காக ஆங்கிலேயர் கையாண்ட வழிவகைகள், பிரித்தானியரின் ஆதிக்கத்தில் இருந்து நாட்டை விடுவிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட சுதந்திரப் போராட்டங்கள், இலங்கையர்களின் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக ஆட்சி முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியன தொடர்பாக இந்த அலகில் கற்பதற்குச் சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 2.0** : நாடொன்றில் வெளிநாட்டு ஆதிபத்தியம் கட்டியெழுப் பப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை மேலைத் தேசங்கள் இலங்கையில் அதிகாரத்தைத் தாபித்தமையூடாக நுணுகியாய்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : பிரித்தானியர் ஆட்சி இலங்கையில் தாபிதமானமையையும் அதன் தொழிற்பாட்டுத் தன்மையையும் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற்பேறுகள்** :

- பிரித்தானியர்கள் ஆசியா மீது கவனஞ் செலுத்தியமைக்கான காரணங்களை விளக்குவார்.
- பிரித்தானியர்கள் இலங்கை மீது கவனஞ் செலுத்தியதற்கான காரணங்களை விளக்குவார்.
- பிரித்தானியர்கள் இலங்கையில் அதிகாரத்தை நிலைநிறுத்திய விதத்தை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

11.2 இலங்கையில் பிரித்தானியரின் அதிகாரம் தாபிக்கப்படல்

2.1 பிரித்தானியர்கள் ஆசியா மீது கவனஞ் செலுத்தியமையின் பின்னணி

- ஆசியாவில் வியாபாரம் தொடர்பான போட்டி
- குடியேற்ற நாடுகளைத் தாபித்தல் தொடர்பான அதிகாரப் போட்டி

2.2 பிரித்தானியர்கள் இலங்கை மீது கவனஞ் செலுத்தியமைக்கான காரணங்கள்

- இலங்கை, இந்து சமுத்திரத்தில் கப்பற்பாதைகளுக்கு இடையே அமைந்துள்ளமை
- வடகீழ், தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலங்களில் பாதுகாப்பாக கப்பல்களை நிறுத்தி வைப்பதற்கேற்ற இயற்கைத் துறைமுகங்கள் காணப்பட்டமை

  உதாரணம்: திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம்
- இலங்கையில் இருந்தவாறே இந்தியாவின் மேற்கு, கிழக்குக் கரையோரப் பிரதேசங்களில் கடல் வழி அதிகாரத்தை இலகுவாகக் கட்டுப்படுத்த முடிந்தமை.
- இலங்கையில் காணப்பட்ட வணிக பண்டங்களின் உயரிய பெறுமதி

  உதாரணம்: கறுவா

2.3 பிரித்தானியர்கள் அதிகாரத்தைத் தாபித்தல்

- **தூதுப்பயணங்கள்**
  - கி.பி. 1762 ஆம் ஆண்டில் ஜோன் பைபஸ் என்பாரை முதன்மையாகக் கொண்ட ஆங்கிலேயத் தூதுக்குழுவொன்று கண்டிக்குச் சென்று கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனைச் சந்தித்தமை
  - கி.பி. 1782 ஆம் ஆண்டில் ஹியூபொயிட் என்பவரின் தலைமையின் கீழ் இரண்டாவது முறையாகவும் ஆங்கிலேயத் தூதுக்குழுவொன்று மன்னனைச் சந்திப்பதற்காக அகட்டப்பட்டமை
  - 1975 இல் ரொபட் அன்ட்ரூஸ் மலைநாட்டுக்கு வந்தமை
  - கி.பி. 1796 ஆம் ஆண்டில் கரையோரப் பிரதேசங்களில் ஆதிக்கத்தைத் தாபித்தமை
- **அதிகாரம் தாபிக்கப்பட்டமையின் பின்னணி**
  - கி.பி. 1794 ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டவர்கள், ஒல்லாந்தை முற்றுகையிட்டமையும் ஒல்லாந்து ஆட்சியாளர், ஸ்ரட்ஹோல்டர் (இளவரசர் 5 ஆம் வில்லியம்) இங்கிலாந்துக்குத் தப்பிச் சென்றமையும்
  - ஒல்லாந்து ஆட்சியாளர் **"கியூ"** மாளிகையில் இருந்து இலங்கையின் ஒல்லாந்துத் தேசாதிபதிக்கு கடிதத்தை அனுப்பியமை
  - ''கியூ'' கடிதத்தின்படி, ஒல்லாந்தரின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களை ஆங்கிலேயரிடம் ஒப்படைக்க அப்போதைய ஒல்லாந்து தேசாதிபதி ∴பன் எங்கல்பெக் விரும்பாமை.
  - ஆங்கிலேயர்கள் கி.பி. 1795 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒல்லாந்தரைத் தாக்கி திருகோணமலையைக் கைப்பற்றியமை
  - பின்னர் முறையே, யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி, கொழும்பு ஆகிய கரையோரப் பிரதேசங்களையும் கைப்பற்றினர்.
  - ஒல்லாந்தரின் ஆதிக்கத்தின்கீழ் இருந்த இலங்கையின் கரையோரப்பிரதேசங்களை ∴பன் எங்கல்பெக் தேசாதிபதி ஆங்கிலேய கிழக்கிந்திய வணிகச் சங்கத்திடம் ஒப்படைப்பதற்காக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை
  - (கி.பி. 1796 - 1798 ஆம் ஆண்டு வரையில்) ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட கரையோரப்பிரதேசங்கள் அக்கம்பனியின் சென்னை, கட்டுப்பாட்டு நிலையத்தினால் கட்டுப்படுத்தப்பட்டமை
  - ஆங்கிலேய வர்த்தக சங்கம், இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்திய கொள்ளைக்கு எதிராக கிளர்ச்சி ஏற்பட்டமை

- கி.பி. 1802 இல் இலங்கைக் கரையோரப்பிரசேங்களில் அதிகாரம் முற்றுமுழுதாக பிரித்தானிய அரசின் கீழ் வந்தமை
- 1798 - 1802 காலப்பகுதியில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் இரட்டை ஆட்சி நடைமுறையிலிருந்தமை
- **1815 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டமை**
- நோர்த் தேசாதிபதியின் காலத்தில் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்காக முற்றுகை இடம்பெற்ற போதிலும் அது தோல்வியடைந்தமை
- கி.பி. 1805 ஆம் ஆண்டில் நியமனம் பெற்று வந்த தோமஸ் மெயிட்லன்ட் தேசாதிபதி, ஜோன் டொயிலி என்பவரது உதவியுடன் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கியமை
- மன்னன் ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் செயற்பாடுகள் காரணமாக, பிக்குமார்களும் உயர்குடிப் பிரபுக்களும் பொது மக்களும் மன்னர் குறித்து அதிருப்தியுடன் இருந்தமை

- தாழ் நாட்டிலிருந்து கண்டி இராச்சியத்தை நோக்கிச் சென்ற வணிகச் குழுவொன்றுக்கு மன்னர் கடும் தண்டனை விதித்தமையைக் காரணமாகக் கொண்டு ஆங்கிலேயர்கள் 1815 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தை முற்றுகையிட்டமை
- சிங்களத் தலைவர்கள் கண்டி இராச்சிய மன்னனைப் பிடித்து, ஆங்கிலேயப் படையினரிடம் ஒப்படைத்தமை
- 1815 ஆம் ஆண்டு மார்ச் 03 ஆம்திகதி கண்டி ''மகுள் மடுவ'' எனுமிடத்தில் கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமையும் கண்டி இராசதானி, பிரித்தானியரின் அதிகாரத்தின் கீழ் வந்தமையும்

**மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.**

- கி.பி. 1796 ஆம் ஆண்டிலிருந்து பிரித்தானியர்கள் கண்டி இராசதானியைக் கைப்பற்றுதல் வரையிலான வரலாற்றுத் தகவல்களைத் திரட்டுவதற்காக, வினாக்கொத்தொன்று தயாரித்தல்.
  - இதனை ஒரு குழுச் செயற்பாடாக வழங்குக.
  - வகுப்பு மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாப் பிரிக்குக.
  - ''பிரித்தானியர் அதிகாரத்தைத் தாபித்தல்'' பற்றிய பாடத்தை வாசிப்பதற்கு குழுக்களுக்கு சந்தர்ப்பமளிக்குக.
  - இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழ், பாடநூலைத் துணையாகக் கொண்டு, குறுவினாக்கள் தயாரிக்குமாறு அறிவுறுத்துக.
  - தலைப்புக்குப் பொருத்தமானவாறு அர்த்தபுஷ்டியான வினாக்கள் தயாரிக்குமாறும், அவ்வினாக்களுக்குரிய விடைகளையும் தயாரிக்குமாறு அறிவுறுத்தல் வழங்குக. வினாக்களை ஒரு நிறத்திலும் விடைகளை மற்றுமொரு நிறத்திலும் எழுதுவது பொருத்தமானது என்பதை அறிவிக்குக.
  - இச்செயற்பாடடிற்காக ஏறத்தாழ 02 பாடவேளைகளை வழங்குக.
  - அந்தந்தக் குழு தயாரித்த வினாக்கொத்துக்களை, வகுப்பு மாணவர் அனைவரதும் பயன்பாட்டுக்கு ஏற்றவகையில் சிறு நூல் வடிவில் தயாரிக்குமாறு அறிவுறுத்துக.
  - குழுக்கள் தயாரித்த வினா விடைப் புத்தகங்களை மதிப்பீடு செய்க.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.
    - இலங்கையில் பிரித்தானியர்கள் தமது ஆதிக்கத்தைத் தாபித்தமை தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
    - தயாரித்த வினா விடைகளை அந்தந்தத் தலைப்புக்கேற்ப ஒழுங்குபடுத்துவார்.
    - வினாக்களின் தகுதியையும் செம்மையையும் பாதுகாப்பார்.
    - குழுநிலையில் ஒத்துழைத்துச் செயற்படுவார்.
    - வினாவிடைப் புத்தகமொன்று தயாரிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- சிறிய அப்பியாசப்புத்தகம் (40 பக்கம்)

## இணைப்பு 1

பின்வரும் தலைப்புக்களின் கீழ் வினா விடைகளைத் தயாரிக்குக.

- இலங்கையில் பிரித்தானியர்களின் அதிகாரம் தாபிக்கப்பட்டமை தொடர்பாக சகல தலைப்புக்களும் உள்ளடங்குமாறு வினாக்கள் தயாரிக்குக.
    - பிரித்தானியர்கள் ஆசியாவுக்கு வருகை தந்தமைக்கான பின்னணி
    - பிரித்தானியர்கள் இலங்கை மீது கவனஞ் செலுத்தியமை
    - இலங்கையில் பிரித்தானியரது அதிகாரம் தாபிக்கப்படல்

**தேர்ச்சி 2.0** : நாடொன்றில் வெளிநாட்டு ஆதிபத்தியம் கட்டியெழுப் பப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை மேலைத் தேசங்கள் இலங்கையில் அதிகாரத்தைத் தாபித்தமையூடாக நுணுகியாய்வார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராக எழுந்த சுதேச எதிர்ப்புக்களை எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள்** : 07

**கற்றற்பேறுகள்** :

- பிரித்தானியருக்கு எதிராக ஏற்பட்ட சுதேச எதிர்ப்புக்களைக் குறிப்பிடுவார்.
- சுதேச எதிர்ப்புக்களின் தன்மையையும் விளைவுகளையும் விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**2.4 வெளிநாட்டு ஆதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்கள்**

**1818 இன் சுதந்திரப் போராட்டம்**

- 1818 ஆம் ஆண்டு போராட்டத்துக்கு ஏதுவாகிய காரணங்கள்
  - மன்னன் இல்லையே எனும் ஏக்கமும் தமதேயான ஒரு மன்னனை நியமித்துக் கொள்ளும் அவசியமும்
  - ஆங்கிலேயரின் ஆட்சி தொடர்பாகக் கண்டி மக்களின் அதிருப்தி
  - சமயம் மற்றும் பண்பாட்டின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் காணப்பட்டமை
  - கண்டி உயர்குடி வர்க்கத்தினரின் அந்தஸ்து, வருமான வழிகள் போன்றவை வீழ்ச்சியடைந்தமை
  - மடிகே முகாந்திரம் பதவிக்கு ஹஜ்ஜி மரிக்கார் என்பவர் நியமிக்கப்பட்டமை

- 1818 ஆம் ஆண்டு போராட்டத்தின் தன்மை
  - அரசிற்கு உரிமைகோரிய துரைசாமி என்பாருடன் ஊவா - வெல்லஸ்ஸைப் பிரதேசத்தில் போராளிகள் ஒன்று திரண்டமை
  - பதுளை உதவி அரச அதிபருக்கு போராளிகளைக் கட்டுப்படுத்த முடியாமற் போனமை
  - கெப்பெட்டிப்பொல உட்பட மேலும் பல தலைவர்கள் போராட்டத்தில் சேர்ந்து கொண்டமை
  - போராட்டம் பரவலடைந்தமை
  - ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் தன்மை
  - போராட்டம் தோல்வியடைந்தமை (தலைவர்கள் கைது செய்யப்பட்டமை)

- கி.பி. 1818 ஆம் ஆண்டின் முதலாவது சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்குக் காரணங்கள்
  - போராட்டம் நன்கு ஒழுங்குபடுத்தப்படாமை. வெவ்வேறு பிரதேசத் தலைவர்களுகட்கு இடையே போதிய ஒழுங்கமைப்பு காணப்படாமை
  - தந்ததாது பிரித்தானியர் கைவசமாதல்
  - உயர் குடி வர்க்கத்தினருக்கு இடையேயான தனிப்பட்ட குரோதங்கள்

- ஆங்கிலேயர் கையாண்ட பயிர் அழிப்புக் கொள்கை கிராமப் பயிர் நிலங்களில் பயிர்களை அழித்தொழித்தல்
- துரைசாமி என்பவர் சிம்மாசனத்துக்கு உரித்துடைய ஒருவர் அல்ல என்பது அறியப்பட்டமை
- சுதேச மக்களுக்கு ஆங்கிலேயரின் புதுவகை ஆயுதங்களை எதிர்கொள்ள முடியாமற் போனமை
- 1818 ஆம் ஆண்டு செப்ரம்பர் 21 ஆந் திகதிக்கு முன்னர் சரணடைவோருக்கு அபயதானம் வழங்கப்படும் என பிரித்தானிய அரசு அறிவித்தமை

- 1818 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகள்
  - ஆங்கில அரசாங்கத்தின் கடுமையான கட்டுப்பாட்டுக்கு கண்டி மக்கள் ஆளாகியமை
  - கிளர்ச்சித் தலைவர்களாகிய கெப்பெட்டிப்பொல, மடுகல்லே ஆகியோர் அரச துரோகிகளாகக் கருதப்பட்டு கண்டி போகம்பறையில் சிரச்சேதம் செய்யப்பட்டு உயிர் நீத்தமை
  - ஏனைய தலைவர்கள் நாடு கடத்தப்பட்டமையும் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட்டமையும்

- 1818 ஆம் ஆண்டின் பிரகடனம் வெளியிடப்பட்டமை
  - அப்பிரகடனத்தின்படி அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை
    உதாரணம்: உப விதானமாரை நியமிப்பதற்காக கண்டி சுதேச அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரம் இரத்துச் செய்யப்பட்டமை
  - கண்டி உயர்குடியினர் பிரித்தானியர்களிடத்தே சம்பளம் பெறுவோராக மாறியமை
  - கண்டி சுதேச அதிகாரிகளுக்கு பொதுமக்களிடமிருந்து அன்பளிப்புக்கள் பெற அனுமதி கிடையாது என்பது அறிவிக்கப்பட்டமை
  - தேசாதிபதியின் அனுமதியின் பேரில் கண்டி இராச்சியத்தில் ஏனைய சமயங்களைப் பரப்புவதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டமை
  - ஆங்கிலேயரின் நீதிமன்ற முறைமை கண்டிப் பிரதேசங்களில் தாபிக்கப்பட்டமை

- 1848 ஆம் ஆண்டு இரண்டாம் சுதந்திரப்போராட்டம்
  - கோல்புறூக் ஆணைக்குழுவினது விதந்துரைப்பின் பேரில் 1833 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட மறுசீரமைப்புக்களின் விளைவுகளே 1848 ஆம் ஆண்டில் இரண்டாம் சுதந்திரப் போராட்டத்துக்கான பின்னணியை உருவாக்கியமை

- 1848 ஆம் ஆண்டு சுதந்திரப்போராட்டத்துக்கு ஏதுவாகிய காரணங்கள்
  - சிவில் சேவை சீர்குலைந்தமையும் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு குறைவடைந்தமையும்
  - சுதேச விவசாய நடவடிக்கைகளுக்கு அரசின் அனுசரணை கிடைக்காமற் போனமை
  - மாவட்ட நீதிமன்ற முறை காரணமாக கிராமிய மக்கள் இன்னல்களுக்கு ஆளாகியமை
  - ஸ்டுவர்ட் மக்கன்சி எனும் தேசாதிபதியினால் 1840 இல் விதிக்கப்பட்ட தரிசு நிலச் சட்டம்
  - பௌத்த சமயத்துக்கு அரச அனுசரணை வழங்குவது நிறுத்தப்பட்டமை
  - டொரிங்டன் தேசாதிபதியின் புதிய வரிக் கொள்கை
  - நீல ஏடு (Blue Book) எனும் புள்ளிவிவரத் திரட்டுக்கான தகவல் சேகரித்தல் தொடர்பாக பொதுமக்களிடத்தே காணப்பட்ட ஐயப்பாடு

- போராட்டத்தின் தன்மை
    - மலைநாட்டவர்கள் பிரித்தானிய ஆட்சியாளரிடம் விண்ணப்பம் (Petition) ஒன்றினைக் கையளிக்கச் சென்ற சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட கலவர நிலைமையின் போது தேசாதிபதி யுத்தச் சட்டத்தை விதித்தமை
    - மாத்தளையில் ஆரம்பித்த போராட்டம் கண்டி, தம்புள்ளை, வாரியப்பொலை, குருணாகல் போன்ற பிரதேசங்களுக்கும் துரிதமாகப் பரவியமை
    - 1848 ஆம் ஆண்டு சுதந்திரப்போராட்டத்தில் தலைமைத்துவமேற்றோர்
        - வீர புரன் அப்பு
        - கொங்காலேகொட பண்டா
        - தினெஸ் அங்குராங்கெத்தை டிங்கிரால
        - சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமை
    - **1848 ஆம் ஆண்டு சுதந்திரப்போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்**
        - போராட்டம் நன்கு ஒழுங்கமைக்கப்படாமையும் அனுபவம் போதாமையும்
        - மலைநாடெங்கிலும் திருப்திகரமான பாதைத் தொகுதி காணப்படாமை
        - ஆங்கிலேயருக்கு, தேவைப்பட்ட சந்தர்ப்பங்களின் மேலதிக படை கிடைத்தமை
        - சிங்களவருக்கு புதிய வகை ஆயுதங்களோ பயிற்றப்பட்ட படையினரோ இன்மை

- **1848 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகள்**
    - டொரிங்டன் தேசாதிபதி அப்போது பதவியிலிருந்த குடியேற்ற செயலாளர் எமர்சன் டெனன்ற் ஆகியோர் மீள இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டமை
        - குற்றவாளிகள் என நிருபிக்கப்பட்டோருக்கு தண்டனை வழங்கப்பட்டமையும் சொத்துக்களை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமையும்
        - பொது மக்களின் எதிர்ப்புக்கு உள்ளாகிய சில வரி வகைகள் - கடைகள் வரி, நாய் வரி
        - சில வரிவகைகள் மறுசீரமைக்கப்ட்டமை - முத்திரை வரி, துவக்கு வரி, வண்டி வரி, படகு வரி, ஆள்வரி
        - கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் தொடர்பாக காட்டிய கவனம் போதாது என்பதைப் பிரித்தானிய ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டமையால் விவசாயத்தையும் நீர்ப்பாசனத்தையும் விருத்தி செய்வதற்கு அரசின் அனுசரணை வழங்கப்பட்டமை
    - பெருந்தோட்டப்பயிர்ச் செய்கைக்குத் தேவையான பாதைகள் அமைக்கப்பட்டமை பிரதேச மற்றும் மாகாண நிருவாக நடவடிக்கைகளை மேம்படுத்துமாறு 1852 ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சியாளருக்கு அனுமதி வழங்கப்பட்டமை
      உதாரணம்: நகர சபைகளும் கிராம சபைகளும் தாபிக்கப்பட்டமை
    - வரிகளை இரத்துச் செய்தல், வரிகளை மறுசீரமைத்தமை, விவசாயத்தையும் நீர்ப்பாசனத்தையும் மேம்படுத்த நடவடிக்கை எடுத்தமை போன்றவை இப்போராட்டம் நியாயமானது என்பதை பிரித்தானிய ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டமையைக் காட்டுகின்றது.

- **மேற்படி விடயங்கள் உள்ளடங்குமாறு கி.பி. 1818, கி.பி. 1848 ஆம் ஆண்டுகளில் சுதந்திரப் போராட்டங்கள் தொடர்பாக ஓர் அட்டவணை தயாரித்தல்**
  - இதற்காக ஒரு பாடவேளை அவகாசம் வழங்குக.
  - இதனை குழுச் செயற்பாடாக வழங்குக.
  - வகுப்பு மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள அட்டவணையை பிரிஸ்டல் அட்டையொன்றில் அல்லது பொருத்தமான அளவுடைய ஒரு கடதாசியில் பிரதி செய்து கொள்க.
- பாடநூலையும் ஏனைய மூலாதாரங்களையும் கற்றாய்ந்து அட்டவணையைப் பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்துக.
- பூர்த்தி செய்த அட்டவணைகளைச் சுவரில் காட்சிப்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கி மதிப்பீடு செய்க.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- இணைப்பு 1 அட்டவணை
- பிரிஸ்டல் அட்டைகள்
- பெல்ற் பேனைகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.
- 1818, 1848 ஆம் ஆண்டுகளின் சுதந்திரப் போராட்டங்கள் பற்றிய தகவல்களை முன்வைப்பார்.
- அட்டவணையைச் சரியாகப் பூர்த்தி செய்வார்.
- சுதந்திரப் போராட்டத்தின் தலைவர்களை மதிப்பார்.
- உரிய நேர வரையறையினுள் வேலையைப் பூர்த்தி செய்வார்.
- செயற்பாட்டை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கு ஒத்துழைப்பு நல்குவார்.

**இணைப்பு 1**

| ஆண்டு | போராட்டத்துக்கு ஏதுவாகிய காரணங்கள் | போராட்டத்தின் தலைவர்கள் | போராட்டத்தின் விளைவுகள் |
|---|---|---|---|
| ................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................ | ................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................ | ................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................ | ................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................<br>................................ |

## அலகு 11.3 இலங்கையில் சமய, பண்பாட்டு மறுமலர்ச்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக்கு வந்த பல்வேறு மிஷனரி அமைப்புக்கள் தமது சமயத்தை இந்நாட்டில் பரப்புவதற்குக் கையாண்ட நடவடிக்கைகளின் விளைவாக இலங்கையில் பௌத்த, இந்து, முஸ்லிம் மக்களுக்கிடையே சமய மலர்ச்சி ஏற்பட்டது. அதனைச் சமய மற்றும் தேசிய மறுமலர்ச்சி எனலாம்.

**தேர்ச்சி 3.0** : இலங்கையின் மகத்துவத்தைப் பேணுவதற்காகச் செயற்பட்ட தலைவர்களை மதித்து, அம்முன்மாதிரிகளை நடத்தையாக்கிக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : வெளிநாட்டுச் சக்திகளின் முன்னிலையில் தேசியத் தலைவர்கள் செயற்பட்ட விதத்தைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** : 07

**கற்றற்பேறுகள்** :

- இலங்கையின் தேசிய இயக்கத்தின் பின்னணியை விவரிப்பார்.
- இலங்கையின் சமய, பண்பாட்டு மறுமலர்ச்சிக்குத் தோள் கொடுத்த தலைவர்களைக் குறிப்பிடுவார்.
- தேசியப் பிரச்சினைகளின்போது தலைவர்களின் பொறுப்புக்களை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**சமய, பண்பாட்டு மறுமலர்ச்சியின் பின்னணி**
பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் இலங்கைக்கு வந்த பல்வேறு மிஷனரி அமைப்புக்கள் தமது சமயத்தை இந்நாட்டில் பரப்புவதற்காகப் பிரதானமான மூன்று முறைகளைக் கையாண்டன.

எழுத்து வழியாக - பல்வேறு செய்தித்தாள்கள், நூல்கள், சஞ்சிகைகள் அச்சிட்டு மக்களிடையே விநியோகித்தல் ('மாதாந்தப் பரிசு', உரைகல், லங்கா புதையல் போன்ற சஞ்சிகைகள்)

உரையாற்றுதல் வழியாக - பொதுமக்கள் ஒன்றுசேரும் இடங்களுக்கு வந்து உரை, கலந்துரையாடல் போன்ற வழிகளைக் கையாண்டு சமயத்தைப் பரப்புதல்

கல்வி வழியாக - சமயத்தைப் பரப்புவதற்கு பயன்மிக்கதாக அமைந்த வழி கல்வி ஆகும். எனவே பல மிஷனரி அமைப்புக்கள் பாடசாலைகளை அமைத்தல் அப்பாடசாலைகளை நடத்திச் செல்லல் ஆகியவற்றைத் தமது பொறுப்பாகக் கருதிச் செயற்பட்டனர்.

இந்நாட்டு பௌத்த, இந்து, முஸ்லிம் மக்கள் எழுத்து, உரை, கல்வி ஆகிய அதே வழிகளைக் கையாண்டு மிஷனரிகளுக்கு எதிர்ப்பினைக் காட்டியமை சமய மறுமலர்ச்சி இயக்கத்தின் சிறப்பியல்பாகும். பொதுவாக நாட்டின் பெரும்பான்மை மக்களாகிய பௌத்தர்களின் சமய மறுமலர்ச்சி இயக்கம் முதன்மை பெற்றுக் காணப்பட்டது.

**பௌத்த மறுமலர்ச்சி இயக்கம்**

பாணந்துறை, வளானை வண ஸ்ரீ சித்தார்ந்த அவர்கள் இரத்மலானையில் பரமதம்மசேத்திய பிரிவேனாவைத் தாபித்த பின்னர் அப்பிரிவெனாவின் ஊடாக துறவிகளான கல்விமான்கள் மட்டுமன்றி துறவிகள் அல்லாத கல்விமான்களும் உருவாயினர். அக்கல்விமான்கள் ஒன்று திரண்டு 1873 ஆம் ஆண்டில் வித்தியோதய பிரிவெனாவையும் 1875 ஆம் ஆண்டில் பேலியகொடையில் வித்தியாலங்கார பிரிவெனாவையும் தாபித்தமையினால் மேலும் பல கல்விமான்கள் உருவாயினர். அவ்வாறாக உருவாகிய கல்விமான்கள் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் நடவடிக்கைகளுக்குத் தலைமைதாங்க முன்வந்தனர்.

**எழுத்து வழியாக சமயம் பரப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல்**

அச்சகங்கள் தாபிக்கப்பட்டமை

- ''லங்காபிவன விஸ்ருத்த'' அச்சகம் தாபிக்கப்பட்டமை
- ''சரசவி சந்தரச'' அச்சகம், ஸ்ரீ சுதர்சன அச்சகம், ''கவட்ட கத்திக்கயா'' அச்சகம் போன்ற மேலும் சில அச்சகங்கள் தாபிக்கப்பட்டமை
- செய்தித்தாள்கள் சஞ்சிகைகள் அச்சிடப்பட்டமை
  - ''லக்மிணி பகன'' செய்தித்தாள்
  - ''சரசவி சந்தரச'' செய்தித்தாள்
  - ஏனைய வேறு செய்தித்தாள்கள், சஞ்சிகைகள்
- செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் மூலம் விவாதங்கள் நடத்தப்பட்டமை

**உரையாற்றுதல் வழியாக பரப்பல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல்**

- சமயத்தைப் பரப்புவதற்கான ஒரு வழியாக, மிஷனரிமார் உரையாற்றல் முறையைக் கையாண்டமை, பௌத்தர்களும் அதே ஊடகத்தைப் பயன்படுத்தி, மிஷனரிமாருக்கு பதில் கொடுத்தமை
- வண மிகெட்டுவத்தே குணானந்த அவர்களின் தலைமையில் ஐம்பெரும் விவாதங்கள் நடத்தப்பட்டமை.
  உ-ம்: 1873 ஆம் ஆண்டில் பாணந்துறையில் விவாதம் நடத்தப்பட்டமை

**கல்வி வழியாக சமயம் பரப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல்**

- ஹென்ரி ஸ்டீல் ஒல்கொட் என்பார் வருகை தந்தமை; பரம விஞ்ஞார்த்த சங்கம் தாபிக்கப்பட்டமை; பௌத்த பாடசாலை நிதியம் தாபிக்கப்பட்டமை
- பௌத்த பாடசாலை நிதியத்துக்கு உதவிகள் பெறுவதற்காக ஒல்கொட் அவர்களும் பிக்குமாரும் நாடெங்கிலும் சென்றமை
- பாடசாலைகள் தாபிக்கப்பட்டமை
  - கொழும்பு ஆனந்தாக் கல்லூரி
  - மாத்தளை விஜய கல்லூரி
  - காலி மிகிந்த கல்லூரி
  - கண்டி தர்மராஜ கல்லூரி
- 1900 ஆம் ஆண்டு ஆகும் போது இவ்வாறான பல பாடசாலைகளைத் தாபிக்க முடிந்தமை

**பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் ஊடாகத் தோன்றிய நாட்டுப்பற்றாளர் இயக்கங்கள்**

- 19 ஆம் நூற்றாண்டின் இறுதியாகும் போது, பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் நடவடிக்கைகள், மிஷனரிமாரின் நடவடிக்கைகளுக்குப் பதிலளித்தல் எனும் நிலையை விஞ்சிச் சென்றதோடு மேலும் மூன்று இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

1. **சுதேசிகளிடத்தே தேசப்பற்றை ஏற்படுத்தும் இயக்கம்**
   பியதாச சிரிசேன அவர்கள், தமது புனை கதைகள் மற்றும் ''சிங்கள ஜாத்திய'' எனும் செய்தித்தாள் போன்றவற்றின் மூலம் இதற்குப் பங்களிப்புச் செய்தார். அனகாரிக தர்மபால அவர்கள், வலிசிங்க ஹரிஸ்சத்திர அவர்கள் போன்ற துறவிகளல்லாத தலைவர்களும் பௌத்த பிக்குகளும் இதற்குப் பங்களித்தனர். சுதேசிகள் ஆய்ந்தோய்ந்து பாராது மேற்கத்தேய பண்பாட்டைப் பின்பற்றியமையை விமர்சித்தலும் சுதேச பண்பாட்டில் அடங்கியுள்ள உயரிய பண்புகளைச் சுதேசிகளுக்கு விளக்குவதுமே இதன் குறிக்கோள்களாக அமைந்தன.
2. **பௌத்த புண்ணியத்தலங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள்**
   அனகாரிக தர்மபால அவர்கள், இந்தியாவில் பௌத்த புண்ணியத் தலங்களைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தமை; வலிசிங்க ஹரிஸ்சந்திர அவர்கள், அனுராதபுரத்தில் புண்ணியத்தலங்களைப் பாதுகாக் நடவடிக்கை எடுத்தமை.

3. **மது ஒழிப்பு இயக்கம்**
   - பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் மதுபானமருந்தும் பழக்கம் இலங்கையில் துரிதமாகப் பரவிச் சென்றவண்ணம் இருந்தது. இதன் விளைவாக பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தலைவர்கள் மக்களை மதுபானப்பாவனையிலிருந்து மீட்டெடுப்பதற்கான, பிரசார இயக்கமொன்றினை ஆரம்பித்தனர்.
     - அனகாரிக தர்மபால அவர்கள் ''சிங்கள பௌத்தயா'' எனும் செய்தித்தாளின் மூலமும் பகிரங்கச் சொற்பொழிவுகள் மூலமும் இதற்குப் பங்களிப்புச் செய்தமை.
     - பியதாச சிரிசேன அவர்கள், தமது புனைகதைகளில் பல்வேறு பாத்திரங்களை உருவாக்கி மதுபானம் அருந்துவதன் தீயவிளைவுகளைத் தெளிவுபடுத்தியமை
     - ஜோன் த சில்வா அவர்கள் நாடகத்தின் மூலம் இதற்காகப் பங்களிப்புச் செய்தமை.

**இந்து சமய மறுமலர்ச்சி**

- கிறிஸ்தவ மிஷனரிமாரின் நடவடிக்கைகள் மிக வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பாடசாலைகளால் வழங்கப்பட்ட கல்வி காரணமாக தமது பண்பாடுகளும் வழக்காறுகளும் பாரம்பரியங்களும் அழிந்து போகக் கூடும் எனும் அச்சம் இந்துக்களின் மனதில் தோன்றியமை.
- அதன் விளைவாக இந்துக்களுக்கு இடையேயும் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டமை
- இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவராக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் செயற்பட்டமை
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஆற்றிய சில சேவைகள்
  - தமிழ்,சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தாம் பெற்றிருந்த உயர்மட்ட அறிவைத் தமது சேவைகளுக்காகப் பயன்படுத்தியமை
  - இந்து சமயப் பிள்ளைகளுக்காக தமது வீட்டில் வகுப்புகள் நடத்தியமை
  - சைவ பரிபாலன சபை, இந்து கல்விச் சபை ஆகியவற்றைத் தாபித்தமை
  - யாழ்ப்பாணத்தில் இந்து ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தமை
  - இந்துப் பிள்ளைகளுக்காக நூல்களை எழுதியமை, தமிழ் மொழியில் எழுதப்பட்ட உரைநடைகள், செய்யுள்கள், பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமை.
  - அவற்றின் வழியே இந்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியமை

- இவரது இயக்கத்தினை, பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள், பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் போன்ற தலைவர்கள் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றமை.
- **சைவ பரிபாலன சபை, இந்து கல்விச்சபை** ஆகிய இரண்டு அமைப்புக்களும் இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்காக முன்னின்று செயற்பட்டமை.

**இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி**

- இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள்
- அறிஞர் எம்.சீ. சித்திலெப்பை அவர்கள் இஸ்லாமிய சமய மறுமலர்ச்சியின் முன்னோடியாகச் செயற்பட்டமை
- அறிஞர் எம்.சீ. சித்திலெப்பை அவர்கள் ஆற்றிய சேவைகள்
  - அரபு மொழியை மட்டுமன்றி ஆங்கில மொழியையும் கற்குமாறு முஸ்லிம்களைத் தூண்டியமை.
  - கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கத்தை நிறுவியமை
  - கொழும்பு ஸாஹிறாக் கல்விச் சங்கத்தை நிறுவியமை
  - முஸ்லிம் மகளிர் பாடசாலைகளை நிறுவியமை
  - **"முஸ்லிம் நேசன்"** செய்தித்தாளை வெளியிட ஆரம்பித்தமை
  - மேல் நாட்டவரின் நடவடிக்கைகளுக்கு எதிராக சுதேச பண்பாட்டையும் பாரம்பரியங்களையும் வழக்காறுகளையும் பேணுவதற்காக சுதேச தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டமை.

**மேற்படி பாடவிடயங்கள் உள்ளடக்குமாறு பின்வரும் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.**

1. சமய பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கத்துக்குத் தலைமை தாங்கியோர் (வண. ஹிக்கடுவே சுமங்கல அவர்கள், வண. மிகெட்டுவத்தே குணானந்த அவர்கள், பியதாச சிரிசேன அவர்கள், ஶ்ரீலஶ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள், அறிஞர் எம்.சி. சித்திலெப்பை அவர்கள் தொடர்பாக சிறிய மடிப்பேடொன்று தயாரித்தல்.
   - இவர்களுள் மூன்று தலைவர்கள் தொடர்பான தகவல்களைத் தேடிப்பெற்று எழுத வழிப்படுத்துக.
   - இதனைத் தனியாட் செயற்பாடாக வழங்குக.
   - பௌத்த, இந்து, இஸ்லாம் மறுமலர்ச்சி இயக்கங்களைச் சேர்ந்த தலைவர்கள் ஆற்றிய பணிகளை மாணவர்களுக்கு விளக்குக.
   - இத்தலைவர்கள் தொடர்பான தகவல்களைப் பெறத்தக்க வேறு மூலாதாரங்கள் குறித்து மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.
   - மடிப்பேட்டை ஆக்கபூர்வமான வகையில் தயாரிப்பதற்காக சித்திரம், ஒளிப்படம் போன்றவற்றையும் பயன்படுத்துமாறு அறிவூட்டம் செய்க.
   - தமது அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி வைத்துப் பயன்படுத்தக் கூடியவாறாக மடிப்பேட்டைத் தயாரிக்குமாறு அறிவுறுத்துக.
   - மாணவரது ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்மப்பமளித்து கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.
   - பின்தொடர் வேலையாக இணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளதற்கிணங்க சுருக்கக் குறிப்பு எழுதுமாறு மாணவரை வழிப்படுத்துக.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 1
- பாடநூல், ஏனைய மூலாதாரங்கள்
- ஏ4 கடதாசிகள்
- பசை, பெல்ற் பேனைகள்
- படங்கள், ஒளிப்படங்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- சமய பண்பாட்டு மறுமலர்ச்சிக்குத் தோள்கொடுத்த தலைவர்களைப் பெயரிடுவார்.
- சமய பண்பாட்டு மறுமலர்ச்சிக்குத் தோள்கொடுத்த தலைவர்களின் சேவைகளை மதிப்பார்.
- சமய பண்பாட்டு மறுமலர்ச்சிக்குத் தோள்கொடுத்த தலைவர்கள் தொடர்பாக போதுமான அளவு தகவல்களைச் சேகரிப்பார்.
- மதிப்பீட்டுக்குத் தேவையான தகவல்களை பொருத்தமானவாறு திரட்டுவார்.
- மதிப்பீட்டை ஆக்கபூர்வமான வகையில் தயாரிப்பார்.
- தாம் தேடியறிந்த விடயங்களை வகுப்பில் முன்வைப்பார்.

**இணைப்பு 1**

**பின்வரும் தலைப்புக்கள் தொடர்பாக, தமது அப்பியாசப் புத்தகத்தில் சுருக்கக் குறிப்புகள் எழுதுமாறு மாணவர்க்கு அறிவுறுத்தல் வழங்குக.**

1. 19 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் செயற்பட்ட மிஷனரி இயக்கங்கள்
2. பாணந்துறை விவாதம்
3. பரம விஞ்ஞானார்த்த பௌத்த சங்கம்
4. மகாபோதி சங்கம்
5. பௌத்த இளைஞர் சங்கம்
6. சைவ பரிபாலன சபையும் இந்துக் கல்விச் சபையும்
7. முஸ்லிம் கல்விச் சங்கம்

## அலகு 11.4 பிரித்தானியரின் கீழ் இலங்கை அரசியல்

1815 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிய பின்னர் ஆங்கிலேயர்களால் முன்னெடுக்கப்பட்ட அரசியல், பொருளாதார மறுசீரமைப்புக்கள் காரணமாக நாட்டின் எல்லாத் துறைகளிலும் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டன. அவர்களால் 1833 ஆம் ஆண்டில் அறிமுகஞ் செய்யப்பட்ட அரசியலமைப்பு மறுசீரமைப்புக்களின்கீழ், சுதேச மக்களிடத்தே எவ்வித பொறுப்புக்களும் ஒப்படைக்கப்படாமை குறித்து இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலே இலங்கைக் கல்விமான்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இவ்வாறாக நடுத்தர வர்க்கத்தினர் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் காரணமாக, இடையிடையே அரசிலமைப்பு மறுசீரமைப்புக்களைச் செய்ய வேண்டிய நிலையை ஆங்கிலேயர்கள் எதிர்கொள்ள நேரிட்டது. அம்மறுசீரமைப்புத் தொடரில் இடம்பெற்ற இறுதியான மறுசீரமைப்பு சோல்பரி அரசியலமைப்பு மறுசீரமைப்பாகும். அப்போது இலங்கைத் தலைவர்களின் அழுத்தம் காரணமாக 1948 ஆம் ஆண்டில் ஆட்சி அதிகாரங்களைச் சுதேச மக்களிடத்தே ஒப்படைக்க வேண்டிய நிலைக்கு ஆங்கிலேயர்கள் ஆளாயினர். இலங்கையில் மீண்டும் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட அரசியல் ஆர்ப்பாட்டங்கள், இடையிடையே செய்யப்பட்ட அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கள், மீளவும் சுதந்திரத்தை வென்றெடுத்தல் ஆகியன தொடர்பாக இங்கு கவனஞ் செலுத்தப்படுகின்றது.

**தேர்ச்சி 4.0** : தேசிய இயக்கத்தின் ஊடாக, தேசிய ஒருமைப்பாட்டையும் தேசிய ஒற்றுமையையும் பேணுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : **அரசியலமைப்பு வளர்ச்சியையும் தேசிய இயக்கத் தையும் பகுத்தாய்வார்.**

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்** :

- கோல்புரூக் தொடக்கம் சோல்பரி வரை பிரித்தானியரின் கீழ் அரசியலமைப்பின் வளர்ச்சியை விளக்குவார்.
- மதுவொழிப்பு இயக்கத்தினதும் தேசிய இயக்கத்தினதும் எழுச்சியை விவரிப்பார்.
- தேசிய இயக்கத்தின் ஆரம்பக் கட்டத்தில் தேசியத் தலைவர்களின் ஒற்றுமையை விவரிப்பார்.
- தேசிய ஒற்றுமையைப் பேணுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**11.4 பிரித்தானியரின் கீழ் இலங்கையின் அரசியல் மாற்றங்கள்**

4.1 1833 ஆம் ஆண்டு கோல்புறுக் மறுசீரமைப்புக்கள்

- கோல்புறுக் ஆணைக்குழுவின் வருகை
- 1833 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்டவாக்க, நிறைவேற்றுச் சபை தாபிக்கப்பட்டமை
- ஐரோப்பிய வணிகரின் ஆர்ப்பாட்டங்கள்

4.2 1910 ஆம் ஆண்டு மறுசீரமைப்புக்களும் பின்னணியும்

- இலங்கை மத்தியதர வகுப்பினரின் கோரிக்கைகள்
- 1910 ஆம் ஆண்டு மறுசீரமைப்புக்கள்
- மதுவொழிப்பு இயக்கம்
- இந்திய தேசிய இயக்கத்தின் செல்வாக்கு
  - இந்திய போராட்டத்தின் தன்மை
  - மகாத்மா காந்தி அவர்கள் இந்திய தேசிய இயக்கத்துடன் இணைந்தமை
- இந்திய தேசிய இயக்கத்தின் முக்கியமான பாத்திரங்கள்
- இலங்கை பெற்ற தாக்கங்கள்

- இலங்கைத் தேசிய சங்கம் தாபிக்கப்பட்டமை
- 1920, 1924 ஆம் ஆண்டுகளின் அரசியலமைப்பு மறுசீரமைப்பு

4.3 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பு

- அரச சபை
- நிறைவேற்றுச் செயற்குழு முறை
- சர்வசன வாக்குரிமை
- தேசாதிபதியும் அரச அதிகாரிகளும்

4.4 சுதந்திரத்துக்கான ஆர்ப்பாட்டங்கள்

- அரச சபை கால ஆர்ப்பாட்டங்கள்
- இடதுசாரி இயக்கமும் ஆர்ப்பாட்டங்களும் (சூரிய மல் இயக்கம்)
- அமைச்சரவைக் கோரிக்கைகள்
- தேசிய இயக்கத்தின் நடவடிக்கைகள்
- சோல்பரி அரசியலமைப்பும் ஆட்சியை இலங்கையரிடம் ஒப்படைத்தலும்

பிரித்தானியர் இலங்கையில் அறிமுகஞ் செய்த அரசியலமைப்பு மறுசீரமைப்புக்களைக் கவனத்திற் கொண்டு இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்துக.

- இதனை குழுச் செயற்பாடாக நடைமுறைப்படுத்துக.
- இதற்காக இரண்டு பாடவேளைகளை ஒதுக்கிக் கொள்க.
- பிரித்தானியர் அறிமுகஞ் செய்த அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.
- வகுப்பு மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.

- இணைப்பு 1 இல் தரப்பட்ட அட்டவணையைச் சுண்ணப்பலகையில் பிரதி செய்து வகுப்பில் காட்சிப்படுத்துவதற்குப் பொருத்தமானவாறு பிரிஸ்டல் அட்டையில் அல்லது அது போன்ற பெரிய தாளில் அவ்வட்டவணையைப் பிரதி செய்து கொள்ளுமாறு குழுக்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.
- பாடநூலைத் துணையாகக் கொண்டு குழு நிலையில் கலந்துரையாடி, அட்டவணையைப் பூர்த்தி செய்யுமாறு அறிவிக்குக.
- செயற்பாட்டின் இறுதியில் தமது குழு ஆக்கத்தை வகுப்பில் முன்வைத்து விவரிப்பதற்கு ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது முன்வைப்புக்களில் முன்வைக்கப்பட்ட விடங்களைக் குறைநிரப்புச் செய்து, சுண்ணப்பலகையில் அட்டவணையைப் பூர்த்தி செய்க.
- சுண்ணப்பலகையில் பூர்த்தி செய்யப்பட்ட அட்டவணையைத் தமது அப்பியாசப்புத்தகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு மாணவர்க்கு அறிவுத்தல் வழங்குக.
- பின்தொடர் வேலையாக, ''**பிரித்தானியரின் கீழ் இலங்கையில் அரசியல் மாற்றங்கள்**'' எனும் பாடத்துக்குரிய விடயங்கள் உள்ளடக்குமாறு குறுவினா விடைகளடங்கிய சிற்றேடொன்று தயாரிக்குமாறு அறிவுறுத்தல் வழங்குக.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பிரிஸ்டல் அட்டைகள்
- பெல்ற் பேனைகள்
- இணைப்பு 1

**இணைப்பு 1**

| ஆண்டு | அரசியலமைப்பு மறுசீரமைப்பு | சட்டவாக்க அமைப்பின் உறுப்பின் தொகை | சட்டவாக்க அமைப்பிற்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர் தொகை | முக்கியமான மறுசீரமைப்புப் பிரேரணைகள் |
|---|---|---|---|---|
| | | | | |

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

பின்வரும் நியமங்களுக்கமைய கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.

- பிரித்தானியர்கள் அறிமுகஞ் செய்த அரசியலமைப்பு மறுசீரமைப்புக்களைப் பெயரிடுவார்.
- சுதேச தலைவர்களின் அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கள் மூலம் ஆட்சி அதிகாரத்தைப் படிப்படியாக பெற்ற விதத்தை எடுத்துக்காட்டுவார்.
- அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பாக தகவல்களை சரியாக அட்டவணைப்படுத்துவார்.
- செயற்பாட்டை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ய ஒத்துழைப்பு வழங்குவார்.
- அட்டவணையைப் பூர்த்தி செய்து வகுப்பில் முன்வைப்பார்.

## அலகு 11.5 பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக மாற்றங்கள்

கி.பி. 1796 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த பிரித்தானியர் கி.பி. 1815 ஆம் ஆண்டு அளவில் முழு இலங்கையையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததோடு, 1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் கிடைக்கும் வரையில் இந்நாட்டை ஆட்சி செய்த விதம் பற்றி முன்னைய பாடங்களில் கலந்துரையாடப்பட்டது. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இந்நாட்டில் ஏற்பட்ட, பொருளாதார, சமூக, பண்பாட்டு மாற்றங்கள் பற்றியும் பிரித்தானியரின் ஆட்சி காரணமாக எமக்குக் கிடைத்த பயன்மிக்க அம்சங்கள் பற்றியும் இங்கு கவனஞ் செலுத்தப்படுகின்றது.

**தேர்ச்சி 5.0** : புறவாரிப் பண்பாட்டுக் கோலங்கள், சுதேச சமூகக் கட்டமைப்புடன் இசைவடைந்த விதத்தைப் பகுத்தாய்வார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இலங்கைச் சமூகத்துடன் இணைந்து கொண்ட புத்தாம்சங்களை எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற்பேறுகள்** :

- பிரித்தானியரின் கீழ் இலங்கையின் பொருளாதார மாற்றங்களை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**11.5 பிரித்தானியரின் கீழ் இலங்கையில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள்**

**5.1 அறிமுகம்**

பாரம்பரியமான அரசியல் சமூகக் கோலம் பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் மேற்கத்தேய பாரம்பரியங்களுக்கு அமைய மாற்றமடைந்த விதத்தை விளக்குதல்.

**5.2 பொருளாதார மாற்றங்கள்**

- கோல்புறூக் ஆணைக்குழுவின் பொருளாதார மறுசீரமைப்புக்கள்
  - கி.பி. 1833 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட கோல்புறூக் ஆணைக்குழுவின் பிரேரணைகள் மூலம் பதிய பொருளாதாரக் கோலத்துக்கான அடித்தளம் அமைக்கப்பட்டமை
  - ஐரோப்பியருக்கு காணிகளை உரித்தாக்கிக் கொள்வதில் காணப்பட்ட தடைகள் நீக்கப்பட்டமை
  - அரசு இலவசமாகக் கணிகளை வழங்கிய முறை இரத்துச் செயய்ப்பட்டு, அதற்குப் பதிலாக காணி விற்பனைக் கொள்கை அறிமுகஞ் செய்யப்பட்டமை.

- தனியார்துறை முயற்சியாண்மையாளருக்குத் தேவையான உழைப்பைத் தடங்கலின்றிப் பெற வகை செய்வதற்காக கட்டாய சேவைப் பணி முறை இரத்துச் செய்யப்பட்டமை.
- அரசின் வியாபார ஏகாதிபத்தியம் ரத்துச் செய்யப்பட்டமை

**பெருந்தோட்டச் செய்கையின் அபிவிருத்தி**

- இலங்கையில் பெருந்தோட்டச் செய்கையின் ஆரம்பம்
- பெருந்தோட்டப்பயிராக முதன் முதல் கோப்பி செய்கை பண்ணப்பட்டமை
- ஹெமீலியா வெஸ்டார்டிக்கஸ் எனும் பங்கசு/ பூஞ்சண நோய் ஏற்பட்டமையால் கோப்பிச் செய்கை அழிவுற்றமை
- புதிய பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையாக சிங்கோனாச் செய்கை அறிமுகஞ் செயய்ப்பட்டமையும் அது தோல்வியடைந்தமையும்
- பெருந்தோட்டச் செய்கையாளர் தேயிலைச் செய்கையின் பால் கவனஞ் செலுத்தியமை
- தேயிலைச் செய்கை வெற்றியளித்தமை
- தெங்குச் செய்கையில் ஈடுபடுவதற்கு சுதேசிகள் முன்வந்தமை
- கி.பி. 1890 ஆம் ஆண்டாகும்போது இலங்கையில் இறப்பர் பயிர்ச் செய்கை வணிக மட்டத்தில் விரிவடைந்தமை
- பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை காரணமாக, கண்டி, பதுளை, உட்பட நாட்டில் ஏனைய பிரதேசங்களைத் தொடுக்கும் பெருந்தெருக்களும் புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டமை
- செய்திப் பரிமாற்ற நடவடிக்கைகள், தொடர்பாடல் துறை விருத்தியடைந்தமை.

  உதாரணம்: அஞ்சற் சேவை ஆரம்பிக்கப்ட்டமை
- பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சி காரணமாக இந்நாட்டின் தன்னிறைவுப் பொருளாதாரக்கோலம் சீர்க்குலைந்தமையும் இறக்குமதி - ஏற்றுமதி பொருளாதாரம் உருவாகியமையும்
- மேற்படி பாட விடயங்கள் உள்ளடங்குமாறு,
  - ''எமது நாடு ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரக் கோலத்துக்கு உள்ளாகிய விதம்'' எனும் தலைப்பில் செய்தித்தாளொன்றுக்குப் பொருத்தமான கட்டுரையொன்று எழுதுமாறு மாணவரை வழிப்படுத்துக.
  - இதனை ஒரு தனியாள் செயற்பாடாக வழங்குக.
  - மேற்படி தலைப்பில் கட்டுரையை எழுதும் போது, இலங்கையில் காணப்பட்ட, பாரம்பரிய பொருளாதார முறை, பிரித்தானியரின் கீழ் வணிகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டமை, அறிமுகஞ் செய்யப்பட்ட புதிய பயிர்கள் சுதேச பொருளாதாரக் கோலம் படிப்படியாக இறக்குமதி ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாற்றமடைந்தமை

  ஆகிய விடயங்கள் உள்ளடங்கும் வகையில் எழுதுமாறு அறிவுறுத்தல் வழங்குக.
- இச்செயற்பாட்டுக்காக ஒரு பாடவேளை அவகாசம் வழங்குக.
- பாடநூலைத் துணையாகக் கொண்டு கட்டுரையை எழுதுமாறு அறிவுறுத்துக.
- மாணவரது ஆக்கங்களை மதிப்பிடுக.

- பின்தொடர் வேலையாக இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுமாறு அறிவுறுத்துக.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 1

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.

- பிரித்தானியரின் கீழ் இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை ஆரம்பித்த விதத்தை விவரிப்பார்.
- பாரம்பரியமான விவசாயத்தை விஞ்சி பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை விருத்தியடைந்த விதத்தை எடுத்துக் காட்டுவார்.
- பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை காரணமாக ஏற்பட்ட சாதகமான அபிவிருத்தியை மதிப்பார்.
- செய்தித்தாளுக்குப் பொருத்தமானவாறு ஆக்கபூர்வமான கட்டுரையை எழுதுவார்.
- குறித்த நேர வரையறையினுள் வேலையைப் பூர்த்தி செய்வார்.

**இணைப்பு 1**

**பிரித்தானியர் ஆட்சிக்காலப் பெருந்தோட்டச் செய்கை தொடர்பாகக் கவனஞ் செலுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.**

1. கோல்புறூக் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பொருளாதார மறுசீரமைப்புப் பிரேரணைகள் மூன்று தருக.
2. பிரித்தானியர் இந்நாட்டில் பயிரிட்ட பெருந்தோட்டப் பயிர்கள் நான்கைக் குறிப்பிடுக.
3. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக இந்நாட்டுக் காணிகள் பெறப்பட்ட விதத்தை, இரண்டு விடயங்களை முன்வைத்து விளக்குக.
4. பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை காரணமாக இந்நாட்டுப் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட இரண்டு நன்மைகளையும் இரண்டு பாதிப்புக்களையும் விவரிக்குக.

**தேர்ச்சி 5.0** : புறவாரிப் பண்பாட்டுக் கோலங்கள், சுதேச சமூகக் கட்டமைப்புடன் இசைவடைந்த விதத்தைப் பகுத்தாய்வார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இலங்கைச் சமூகத்துடன் இணைந்து கொண்ட புத்தாம்சங்களை எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற்பேறுகள்** :

- பிரித்தானியரின்கீழ் இலங்கையின் சமூக, பண்பாட்டு மாற்றங்களை விளக்குவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**5.3 சமூக மாற்றங்கள்**

**சமூகங்கள்**

- பண்டைய உயர்குடி வகுப்பு தேய்வுற்றமையும் புதிய மத்திய தர வகுப்பு உருவாகியமையும்
- ஆங்கிலக் கல்வி காரணமாக ஐரோப்பியப் பண்பாட்டை மதிக்கும், மேல் நட்டவருக்குச் சார்பான ஒரு தொகுதிச் சுதேசிகள் உருவாகியமை
- சுதேச உயர்குடி வகுப்பினர் வரிசேகரிப்பு உரிமையைக் கொள்வனவு செய்தல் மற்றும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான பண்டங்கள் - சேவைகளை வழங்குதல் ஆகியன மூலமும் பெருந்தோட்ட உரிமையாளர்களாக மாறியமையினால் தமது செல்வத்தை மேலும் பெருக்கிக் கொண்டமை.
- புதிய தொழில்வாய்ப்புக்கள் உருவாகியமை
- பெருந்தோட்டச் சேவைகள் சார்பாக பண்டங்களை ஏற்றியிறக்குதல், மாட்டு வண்டியோட்டல், துணி துவைத்தல் போன்றவற்றைச் செய்த நகரப்புற தொழிலாளர் வகுப்பினரும் இந்தியாவிலிருந்து பெருந்தோட்டங்களில் சேவை செய்வதற்காக வந்தோரான பெருந்தோட்டத் தொழிலாளர் வகுப்பினரும் உருவாகியமை
- இத்தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள் தாபிக்கப்பட்டமை.

**பொருளாதார மாற்றங்கள்**

- ஆங்கிலக் கல்வி காரணமாக ஆங்கில மொழி கற்ற ஒரு தொகுதியினர் சமூகத்தில் தோற்றம் பெற்றமை
- மேற்கத்தேய பண்பாட்டையும் வழக்காறுகளையும் மதிக்கும் ஒரு தொகுதியினர் தோற்றம் பெற்றமை
- மேற்கத்தேய பாணிகள், உணவுகள், ஆடையணிகள், கட்டட நிர்மாண அம்சங்கள் போன்றன இந்நாட்டுப் பண்பாட்டுடன் சேர்ந்தமை

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பிரித்தானியரின் ஆட்சி காரணமாக இந்நாட்டுப் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய விடயங்களடங்கிய நூல்கள், திரைப்படங்கள் போன்றவை
  உதாரணம்: கிராமப் பிறழ்ச்சி (கம்பெரிலிய)

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பாடத்தின் குறிக்கோள்களையும் கற்றற் பேறுகளையும் அளக்கத்தகவாறு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி 5.0** : புறவாரிப் பண்பாட்டுக் கோலங்கள், சுதேச சமூகக் கட்டமைப்புடன் இசைவடைந்த விதத்தைப் பகுத்தாய்வார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இலங்கைச் சமூகத்தை இணைத்து கொண்ட புத்தாம்சங்களை எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற்பேறுகள்** :

- பிரித்தானியரது ஆட்சியின் கீழ் இலங்கைச் சமூகத்துடன் இணைந்த சாதகமான, பாதகமான அம்சங்களை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**5.2 பிரித்தானிய ஆட்சி காரணமாக கிடைத்த பயன்மிகு அம்சங்கள்**

- ஆங்கில மொழி, ஆங்கிலக் கல்வி பெற வாய்ப்புக்கிடைத்தமை
- போக்குவரத்து, செய்திப்பரிமாற்றம் என்பன விருத்தியடைந்தமை
- பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியின் செல்வாக்கு இலங்கைக்குக் கிடைத்தமை
  உதாரணம்: உபகரணங்கள், பொறிகள் அவை தொடர்பான தொழினுட்பம், பாதைகள் போன்றவை
- சிறு கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படல்
- ஏற்றுமதிப் பெருந்தோட்டப் பயிர்கள் அறிமுகஞ் செய்யப்பட்டமை

**5.3 பாதகமான விளைவுகள்**

- சுதேச பண்பாடு சீர்குலைந்தமை
- மதுபானம் அருந்தப் பழகியமை
- தன்னிறைவுப் பொருளாதாரமும் சுதேச அறிவும் வீழ்ச்சியடைந்தமை
- கிராம சபை போன்ற பயனுள்ள அமைப்புக்கள் அழிவுற்றமை
- நில உரிமையற்ற மக்கள் பிரிவினர் தோன்றியமை

மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு ''பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இலங்கைச் சமூகத்திற்கு நன்மைகளே கிடைத்தன தீமைகளே கிடைத்தன'' எனும் தலைப்பின் கீழ் விவாதம் நடத்துதல்.

- விவாத்துக்குப் பொருத்தமானவாறு மாணவரைக் குழுக்களாகப் பிரிக்குக.
- இரண்டு குழுக்கள் அமைத்து விவாதத்தலைப்புக்களை வழங்குக.
- விவாதம் நடத்த நாள் குறித்து குழுக்களிரண்டுக்கும் தலைப்புக்களின் கீழ் ஆயத்தமாக வருமாறு அறிவுறுத்துக.
- விவாதத்துக்காக ஒரு பாடவேளையை ஒதுக்கிக் கொள்க.
- விவாதம் தொடர்பான சட்டதிட்டங்களின்படி விவாதத்தை நடத்துக.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக மாற்றங்கள் தொடர்பான விடயங்களடங்கிய நூல்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இலங்கைச் சமூகத்துடன் சேர்ந்த சாதகமான அம்சங்களையும் பாதகமான அம்சங்களையும் விவரிப்பார்.
- சாதகமான நல்ல அம்சங்களை மதிப்பார்.
- விடயங்களைத் தர்க்க ரீதியில் முன்வைப்பார்.
- விவாதத்தில் பங்குகொள்வார்.
- விவாதம் தொடர்பான நிபந்தனைகளைப் பின்பற்றிச் செயற்படுவார்.

# அலகு 11.6 இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தல்

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாக நிலவிய பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 04 ஆந் திகதி இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் கிடைத்த பின்னர் இலங்கையில் ஆட்சி அதிகாரத்தைத் தாபித்துக்கொள்ளல் தொடர்பாகவும் 1972 ஆம் ஆண்டு மற்றும் 1978 ஆம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாகவும் சுருக்கமாகக் கற்றாய்வது இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. சுதந்திரம் கிடைத்த பின்னர் இலங்கையின் அபிவிருத்திக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் கல்வி, விவசாயம், அரச முயற்சியாண்மைகள், கைத்தொழில்கள், சமூக நலனோம்பல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கற்றலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி 6.0** : சுதந்திரம் கிடைத்த பின்னர் இலங்கையின் அபிவிருத்திச் செய்முறையை விசாரித்தறிவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : சுதந்திரம் கிடைத்த பின்னர் இலங்கையின் அரசியல் நிலைமையைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற்பேறுகள்** :

- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் அதிகாரந் தாபிக்கப்பட்டமையை விளக்குவார்.
- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் அரசியலமைப்பு மறுசீரமைப்புக்களை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

### 6.1 சோல்பரி அரசியலமைப்பும் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தலும்

- சோல்பரி அரசியலமைப்பு மறுசீரமைப்புக்களின் கீழ் கி.பி. 1947 ஆம் ஆண்டில் முதல் தடவையாக அரசியற் கட்சி முறைமையின்கீழ் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டமை குறித்து மாணவர்க்கு விளக்கமளிக்குக.
  - அத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றமை
  - அக்கட்சியின் தலைவர் டீ.எஸ். சேனாநாயக்க அவர்களின் தலைமையில் அரசு தாபிக்கப்பட்டமை.
- இலங்கையர் நடத்திய ஆர்ப்பாட்டங்களின் விளைவாக 1948.02.04 ஆண்டு இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தமை
- சோல்பரி அரசியலமைப்பின் இயல்புகள்
- அதன் பின்னர் அரசியல் கட்சிகளை அடிப்படையாகக் கொண்டு தேர்தல்கள் நடத்தப்பட்டமை இலங்கை அரசியலின் ஒரு சிறப்பியல்பாகும்.

- இலங்கையில் தாபிக்கப்பட்ட சில அரசியல் கட்சிகளைக் குறிப்பிடுதல்.
  - 1935 ஆம் ஆண்டு இலங்கை சம சமாசக்கட்சி
  - 1946 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி
  - 1951 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

### 6.2 1956 ஆம் ஆண்டு தேர்தலும் சமூகப் புரள்வும்

- சுதந்திரத்தின் பின்னர் இடம்பெற்ற இலங்கைத் தேர்தல்களுள் 1956 ஆம் ஆண்டில் நடத்தாப்பட்ட தேர்தல் சிறப்பானது.

### 6.3 1972 ஆம் ஆண்டில் இலங்கை குடியரசாதல்

- இலங்கை குடியரசானமையின் முக்கித்துவத்தை விளக்குதல்
- 1947 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட சோல்பரி அரசியல் யாப்பு இரத்துச் செய்யப்பட்டு 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி இலங்கை, முதல் தடவையாக சுயாதீனமான இறைமையுள்ள சுதந்திரக் குடியரசாக மாறியமை. அது 1972 ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியல் யாப்பின் மூலம் செய்யப்பட்டது.
- 1972 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் மூலம் சட்டவாக்கத்துறை, நிறைவேற்றதிகாரத் துறை, நீதித்துறை ஆகியன செயற்பட்ட விதம்
- அடிப்படை உரிமைகள்
  - சனாதிபதி
    - பெயரளவு நிறைவேற்றதிகாரமாகும்
    - பிரதமரால் பெயர் குறிக்கப்பட்டு நியமிக்கப்படுதல்
    - சனாதிபதியின் சில அதிகாரங்களையும் பணிகளையும் குறிப்பிடுதல்
  - உறுப்பினர் சபை
    - தேசிய அரச சபை குடியரசின் மீயுயர் நிறுவனமாதல்
    - பிரதமரும் அமைச்சரவையும்
    - நீதிமன்ற முறைமை

### 6.4 1978 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு

- பூரண நிறைவேற்றதிகாரமுள்ள சனாதிபதியைக்கொண்ட அரசியலமைப்பாகும்.
  - சனாதிபதி
    - நியமிக்கப்படும் விதம்
    - அதிகாரங்களும் பணிகளும்
    - சனாதிபதி அரசின் தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் படைச் சேவைகளின் தலைவரும் ஆவார்.
  - பிரதமரும் அமைச்சரவையும்
  - பாராளுமன்றம்
    - பாராளுமன்றத்தின் கட்டமைப்பு
    - அதிகாரங்களும் பணிகளும்
  - நீதிமன்றத் தொகுதி
  - அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக இடம்பெற்றுள்ள ஏற்பாடுகள்

**மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு 1972 ஆம் ஆண்டு, 1978 ஆம் ஆண்டுகளின் அரசியலமைப்பு, யாப்புக்களின் மாற்றங்கள் தெளிவாகுமாறு அட்டவணையொன்றினைப் பூர்த்தி செய்தல்.**

- இதனை ஒரு தனியாள் செயற்பாடாகப் பயன்படுத்துக.
- இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்து கொள்ளச் சந்தர்ப்பமளிக்குக.
- அங்கு தரப்பட்டுள்ள விடயப்பரப்புக்களின் கீழ் தகவல்களை இட்டு அட்டவணையைப் பூர்த்தி செய்ய வழிப்படுத்துக.
- ஏனைய மாணருடன் கலந்துரையாடி, தகவல் பெறச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது செயற்பாடுகளை மதிப்பிடுக.
- இதற்காக ஒரு பாடவேளை அவகாசம் வழங்குக.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 1

| | **1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு** | **1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு** |
|---|---|---|
| 1. சட்டவாக்கம் | | |
| 2. நிறைவேற்றதிகாரம் | | |
| 3. நீதித்துறை | | |
| 4. அடிப்படை மனித உரிமைகள் | | |

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- குடியரசு அரசியலமைப்பு மூலம் உருவாக்கப்பட்ட புதிய அம்சங்களைப் பெயரிடுவார்.
- 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூலம் இலங்கை, சுதந்திரமான ஒரு குடியரசாகியமை குறித்துப் பெருமையுடன் பிரஸ்தாபிப்பார்.
- குடியரசு அரசியலமைப்புக்களின் சிறப்பியல்புகளை ஒட்பீட்டு ரீதியில் அட்டவணைப்படுத்துவார்.
- தாம் தேடியறிந்த தகவல்களை ஏனையோருக்கு எடுத்துக் கூறுவார்.
- குறித்த நேரத்துள் வேலைகளைப் பூர்த்தி செய்வார்.

**தேர்ச்சி 6.0** : சுதந்திரம் கிடைத்த பின்னர் இலங்கையின் அபிவிருத்திச் செய்முறையை விசாரித்தறிவார்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தி உத்திகளையும் அவற்றின் வினைத்திறனையும் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்** :

- சுதந்திரத்தின் பின் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை விளக்குவார்.
- அபிவிருத்தி நடவடிக்கைகளின் வினைத்திறனை எடுத்துக் காட்டுவார்.
- சமூக நலனோம்பல் என்றால் என்ன என விளக்குவார்.
- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் நடைமுறையில் இருந்த நலனோம்பல் வேலைத்திட்டங்களை விவரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**6.2 சுதந்திரத்தின் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகள்**

- விவசாயத்துறை மேம்படுத்தப்பட்டமை
- விவசாயக் குடியேற்ற இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டமை
- குளங்கள், அணைக்கட்டுகள், புனரமைக்கப்பட்டமையும் நீர்ப்பாசன வழிகள் தாபிக்கப்பட்டமையும்
- காணி மறுசீரமைப்புக்கள்
- மகாவலி அபிவிருத்தித்திட்டமும் ஏனைய ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டங்களும்
- விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள் தாபிக்கப்பட்டமை
- விவசாயிகளின் நிலைமையை மேம்படுத்துவதற்காகச் செயற்பட்டமை
- வணிக விவசாயத்துறை
- சிறு ஏற்றுமதிகள் அபிவிருத்திகள்
- கைத்தொழில் மயமாக்கல் கொள்கை
  - அரசு தலையிட்டு, பல்வேறு தொழிற்சாலைகள் தாபிக்கப்பட்டமை
    - உருக்குத் தொழிற்சாலை
    - நெசவுத் தொழிற்சாலைகள் - கொகுவளை, பேசாலை, துல்கிரியா
    - ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் - கிந்தோட்டை, கொஸ்கம
    - சீனித் தொழிற்சாலை - ஹிங்குரானை
    - கனியமணல் - புல்மோட்டை
  - இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கை
    - வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குத் தருவிக்கப்படும், விவசாய, கைத்தொழிற் பண்டங்களுக்காக பாரிய அளவு வெளிநாட்டுச் செலாவணி செலவாகின்றமையால், தேசிய நிதியை மீதப்படுத்துவதற்காக உள்நாட்டிலேயே அவற்றை உற்பத்தி செய்வதற்காக ஒரு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டமை. 1970 - 1977 காலப்பகுதியில் இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கை மேன்மேலும் நடைமுறைப்படுத்தப் பட்டது.

- கல்வி
    - இலவசக் கல்வி முறைமை தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டமை
    - பகற்போசனை வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டமை
    - பாடசாலைகளில் வசதிகள் அதிகரிக்கப்பட்டமை
        - ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வொரு விஞ்ஞான ஆய்வுகூடம் வழங்குதல்
- உயர் கல்வி
    - வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவேனாக்கள், பல்கலைக்கழகங்கள் காணப்பட்டமை
    - இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனைக்குச் கொண்டு செல்லப்பட்டமையும் அது அபிவிருத்தி செய்யப்பட்டமையும்
    - மேலும் பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்பட்டமை

**63 சமூக நலனோம்பல்**

- அரசு அதன் பிரசைகளது நலனுக்கு வகை சொல்லுதல் வேண்டும் எனும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அப்பிரசைகளின் பொருளாதார, சமூக நலனுக்கும் பாதுகாப்புக்குமாக அரசு தலையிட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுதல்.
- நலனோம்பும் அரசின் சில குறிக்கோள்களைப் பின்வருமாறு இனங்காணல்
    - சம சந்தர்ப்பங்கள் வழங்குதல்
    - வளங்களைச் சமமாகப் பகிர்ந்தளித்தல்
    - சமூகத்தின் நலிவான பகுதியினருக்கு முன்னேறுவதற்காக கடன் வசதிகளும் நிவாரணமும் வழங்கிச் சந்தர்ப்பமளித்தல்
    - பிரசைகள் நல்வாழ்வு வாழ்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்

      சுதந்திரத்தின் பின்னர் இலங்கை அரசுகளால் சமூக நலனோம்பலுக்காக முன்னெடுக்கப்பட்ட சில வேலைத்திட்டங்கள்
        - **சுகாதாரத்துறை**
            - நோய் தவிர்ப்பு, தொற்றுநோய்க்கட்டுப்பாடு, மலேரியா, வாந்திபேதி கட்டுப்பாடு போன்ற அரசின் நேரடித் தலையீடு தேவைப்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துதல்
            - சுகாதார அடித்தளக் கட்டமைப்பு வசதிகளையும் சேவைகள் வழங்குதலையும் விரிவுபடுத்தல்
    - ஏனைய நலனோம்பு நடவடிக்கைகள்
        - **போக்குவரத்துத்துறை**
            - போக்குவரத்து மக்கள் மயப்படுத்தப்பட்டமை
        - **வறியோர் நிவாரண முறை**
            - அரிசி கூப்பன் முறை
            - உணவுப் பங்கீட்டு முறை
            - வீடமைப்புத்திட்ட முறை
- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், சமூக நலனோம்பலுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை விளங்கிக் கொள்வதற்காக இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டைச் செய்விக்குக.

- இதனை ஒரு தனியாள் செயற்பாடாகப் பயன்படுத்துக.
- இணைப்பில் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காக ஓரிரு நாள்கள் அவகாசம் வழங்குக.
- மாணவரது விடைகளை மதிப்பிடுக.
- பின்னர் ஓரிரு பாடவேளைகளை ஒதுக்கி அவ்வினா விடைகளை மாணவருடன் கலந்துரையாடுக.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 1

பாடநூலையும் வேறு மூலாதாரங்களையும் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

1.
   - i. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட மூன்று விவசாயக் குடியேற்றத்திட்டங்களைப் பெயரிடுக.
   - ii. இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள் சிலவற்றைப் பெயரிடுக.
   - iii. மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.
   - iv. சுதந்திரத்தின் பின்னர், அரசின் தலையீடு மூலம் இலங்கையில் நடமுறைப் படுத்தப்பட்ட கைத்தொழில்மயக் கொள்கை தொடர்பாகச் சுருக்கமாக விளக்குக.

2. சுதந்திரத்தின் பின்னர் இலங்கைக் கல்வித்துறையில் ஏற்பட்ட அபிவிருத்தியைப் பின்வரும் விடயங்களின்கீழ் சுருக்கமாக விளக்குக.
   - பகற்போசன வேலைத்திட்டம்
   - வசதிகளை அதிகரித்தல்
   - பல்கலைக்கழகங்கள் தாபித்தல்

3.
   - i. 'நலனோம்புதலுக்காக அரசு தலையிடல்' அரசு என்பதைச் சுருக்கமாக விளக்குக.
   - ii. சுதந்திரத்தின் பின்னர், இலங்கை அரசினால் பொதுமக்களின் நலனுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்குக.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பாடநூல்களையும் வேறு மூலாதாரங்களையும் உசாவுதல், சரியாக விடையளித்தல், ஆர்வத்துடன் வேலையைப் பூர்த்தி செய்தல், சுத்தமும் நேர்த்தியும் போன்ற அம்சங்களை உள்ளடக்கி, நியமங்களைத் தயாரித்துப் புள்ளி வழங்குக.

# அலகு 11.7 உலகின் முக்கியமான புரட்சிகளும் தேசிய இயக்கங்களும்

நவீன யுகத்தினது வரலாற்றைக் கற்கையில் மனித இனத்தின் முன்னேற்றத்தின்பால் பெரிதும் பங்களிப்புச் செய்த சிறப்பான சில முயற்சிகளைக் காண முடிகின்றது. அவற்றுள் முக்கியமானவையான அமெரிக்க சுதந்திரப் போராட்டம், பிரான்சியப் புரட்சி, ரஷ்யப் புரட்சி ஆகியன தொடர்பாக இந்த அத்தியாயத்தில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 1.0** : வரலாற்று ரீதியான பூகோள, பிராந்திய அரசியல் போக்குகளின் முன்மாதிரிகளைப் பிரதியீடு செய்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : கூட்டாகச் செயற்படுவதால் தமது உரிமைகளை வென்றெடுக்கலாமென்பதை அமெரிக்கப் புரட்சியின் துணையுடன் விவரிப்பார்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற்பேறுகள்** :

- அமெரிக்கப் புரட்சியை விளக்குவார்.
- அமெரிக்கச் சுதந்திரப் போராட்டம் உலக வரலாற்றின் முக்கியத்துவம் பெறும் விதத்தை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**1.1 அமெரிக்க சுதந்திரப் போராட்டம் - அறிமுகம்**

- ஐரோப்பிய நாட்டவர்கள் அமெரிக்காவைக் கண்டுபிடித்தமையும் அங்கு குடியேற்றங்களைத் தாபித்தமையும்
- போர்த்துக்கல், ஸ்பெயின், ஒல்லாந்து, பிரான்சு, பிரித்தானியா ஆகியவை அமெரிக்காவில் குடியேற்றங்களைத் தாபித்த நாடுகளாகும்.
- பிரித்தானியர்கள் 18 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் 13 குடியேற்றங்களைத் தாபித்தமை
  அவையாவன:
  நியூஹாம்ஷயர், மசாசுசெட்ஸ், ரோட் தீவு, கனேடிக்கட், நியூயோர்க், நியூஜேர்சி, பென்சில்வேனியா, டெலவெயார், மேரிலண்ட், வேர்ஜினியா, வட கரோலினா, தென் கரோலினா, ஜோர்ஜியா
- பிரித்தானியரின் கட்டுப்பாட்டிலிருந்து சுதந்திரம் பெறுவதற்காக குடியேற்ற வாசிகள் முன்னெடுத்த போராட்டமே அமெரிக்க சுதந்திரம் போராட்டம் எனப்படுகின்றது.

- **சுதந்திரப் போராட்டத்துக்கு ஏதுவாகிய காரணங்கள்**
    - பிரித்தானிய பாராளுமன்றத்தினால் புதிய வரி வகைகள் அறிமுகஞ் செய்யப்பட்டமை
        - முத்திரை வரி
        - தேயிலை, கண்ணாடி, கடதாசி ஆகியவற்றுக்கு வரி அறவிட்டமை
        - **"பிரதிநிதிகள் இல்லையேல் வரியும் கிடையாது"** எனும் குடியேற்ற வாசிகளின் நம்பிக்கை
    - மேற்படி எல்லா வரிகள் தொடர்பாகவும் பொதுமக்களின் எதிர்ப்பு
    - பிரித்தானியர்கள் குடியேற்றங்களிலிருந்து இலாபமீட்டுவதை மட்டும் எதிர்பார்த்தமை
    - பொஸ்ரன் தேநீர் விருந்து
    - ஜோர்ஜ் வொஷிங்டன் - போராட்டத்தின் தலைமைத்துவமேற்றல்
    - அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்
    - சுதந்திரப் போராட்டத்தில் வெற்றி பெறல்

**விளைவுகள்**
- அமெரிக்க ஐக்கிய குடியரசு சுதந்திர நாடாக மாறியமை
- அமெரிக்க அரசியல் யாப்பும் அதில் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான பிரகடனமும்
- முதலாவது எழுத்து மூல கூட்டு அரசியல் யாப்பு
- அனைத்து மனித சமூகத்துக்கும் சுதந்திரத்தின் பெறுமானத்தை எடுத்துக்காட்டியமையும் அது பிரான்சியப் புரட்சிக்கு முன்மாதிரியாக அமைந்தமையும்

**மேற்கூறப்பட்ட பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு:**
- "உலக வரலாற்றில் அமெரிக்க சுதந்திரப் போராட்டம் முக்கியத்துவம் பெறும் விதம்" எனும் தலைப்பில் கட்டுரை எழுதுவதில் மாணவரை ஈடுபடுத்துக.
- இதனை தனியாள் செயற்பாடாக வழங்குக.
- கட்டுரையை எழுதுவதற்கு ஒரு வார கால அவகாசம் வழங்குக.

## தரவிருத்தி உள்ளீடுகள் :
- அமெரிக்க சுதந்திரப் போராட்டம் பற்றி எழுதப்பட்ட நூல்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும் :
பின்வரும் நியமங்களின் கீழ் கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.
- அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் தன்மையை விளக்குவார்.
- அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் மூலம் உலகுக்குக் கிடைத்த பொக்கிசங்களை மதிப்பார்.
- அமெரிக்கச் சுதந்திரப் போராட்டம் பற்றிக் கட்டுரை எழுதுவார்.
- விடயங்களை ஆக்கபூர்வமாக முன்வைப்பார்.
- குறித்த நேர வரையினுள் வேலையைப் பூர்த்தி செய்வார்.

**தேர்ச்சி 7.0** : வரலாற்று ரீதியான பூகோள, பிராந்திய அரசியல் போக்குகளின் முன்மாதிரிகளைப் பிரதியீடு செய்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.2** : அடிப்படையான மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பிரான்சியர்கள் முன்னெடுத்த போராட்டத்தை விவரிப்பார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற்பேறுகள்** :

- பிரான்சியப் புரட்சியை விவரிப்பார்.
- புரட்சி மூலம் வென்றெடுத்த அடிப்படை மனித உரிமைகளை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**7.2 பிரான்சியப் புரட்சி - அறிமுகம்**

- தான்தோன்றித்தனமாக ஊழல் நிறைந்த ஆட்சி நடத்திய 16 ஆம் லூயி மன்னனுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் தமது மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக முன்னெடுத்த போராட்டமே பிரான்சியப் புரட்சி எனப்படுகின்றது என விளக்குதல்.
- மனித உரிமைகளை வென்றெடுத்த முக்கியமான ஒரு சந்தர்ப்பமாக பிரான்சியப் புரட்சியை அறிமுகஞ் செய்தல்.
- சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு புரட்சி முன்னெடுக்கப்பட்டமை.

பிரான்சியப் புரட்சிக்கு ஏதுவாகிய காரணங்கள்

- அரசியல் காரணிகள்
  - மன்னர்கள் அரசுரிமையை கடவுள் தந்த ஒரு வரமாகக் கருதியமை
  - மன்னன் கொண்டிருந்த வரையறையற்ற அதிகாரங்கள்
  - எதிரிகளை மடக்குவதற்கு அரச அதிகாரத்தைப் பயன்படுத்தல்
  - மன்னன் அனுபவித்த சுகபோக வாழ்வு
  - ஊழல் நிறைந்த முடியாட்சி
- சமூகக் காரணிகள்
  - நில மானிய சமூகம்
  - வகுப்புகளைக் கொண்ட சமூகம் காணப்பட்டமையும் அச்சமுக வகுப்புக்களுக்கு இடையே காணப்பட்ட விரிசல்களும்
  - மத்திய வகுப்பினருக்கு சமூகத்தில் இடம் கிடைக்காமை
- பொருளாதாரக் காரணிகள்
  - பிரான்சுத் திறைசேரி வெறுமை நிலையை அடைந்தமை
  - பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டிருந்த அதிக வரிச்சுமை
  - பிரான்சு மத்திய வகுப்பினரிடமிருந்து வரி அறவிட மன்னனால் முடியாமற் போனமை

- ஏனைய காரணிகள்
    - தத்துவக் கருத்துக்கள்
    - ரூசோ, வோல்டேயர், மொன்ரெஸ்கியு ஆகிய தத்துவஞானிகளின் கருத்துக்கள்
    - அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் செல்வாக்கு

**புரட்சியின் ஆரம்பம்**

- ஸ்டேட் ஜெனரல் சபையைக் கூட்டியமை
- பஸ்ரீலைத் தாக்குதல்
- பொதுமக்களின் எழுச்சி
- புரட்சிக்காரரின் நடவடிக்கைகள்

**புரட்சியின் விளைவுகள்**

- 1791 ஆம் ஆண்டின் மனித உரிமைகள் தொடர்பான பிரகடனம்
- பிரான்சு அரசு வீழ்ச்சியடைதல்
- விவசாயிகளும் தொழிலாளர்களும் பெற்ற வெற்றிகள்
- நிலையற்ற அரசியல் முறை தோற்றம் பெற்றமை
- நெப்போலியன் அதிகாரத்துக்கு வந்தமை

**மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பிரான்சு மக்கள் வென்றெடுத்த மனித உரிமைகள் எனும் தலைப்பில் கட்டுரையொன்று எழுதுமாறு மாணவரை வழிப்படுத்துக.**

- இதனை ஒரு தனியாள் செயற்பாடாக வழங்குக.
- கட்டுரையை எழுதுவதற்கு இரண்டு நாள் கால அவகாசம் வழங்குக.
- மாணவர் ஒவ்வொருவரதும் கட்டுரையை மதிப்பிடுக.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- பிரான்சியப் புரட்சி தொடர்பான நூல்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- பிரான்சியப் புரட்சி தொடர்பாக விவரிப்பார்.
    - பிரான்சிய மக்கள் வென்றெடுத்த உரிமைகளை மதிப்பார்
    - கட்டுரையை ஆக்கபூர்வமாக எழுதுவார்.
    - போதுமான அளவு விடயங்களை முன்வைப்பார்.
    - குறித்த நேரவரையினுள் வேலையைப் பூர்த்தி செய்வார்.

**தேர்ச்சி 7.0** : வரலாற்று ரீதியான பூகோள, பிராந்திய அரசியல் போக்குகளின் முன்மாதிரிகளைப் பிரதியீடு செய்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.3** : சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்காக முன்னெடுக்கப் பட்ட ரஷ்யப்புரட்சியை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற்பேறுகள்** :

- ரஷ்யப் புரட்சியை விளக்குவார்.
- புரட்சி மூலம் வென்றெடுத்த சோசலிச எண்ணக்கருக்களை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**7.3 ரஷ்யப் புரட்சி - அறிமுகம்**

- இருபதாம் நூற்றாண்டாகும்போது ரஷ்யாவில் காணப்பட்ட ஊழல் மிக்க சர்வாதிகார மன்னராட்சிக்கு எதிராக ரஷ்யாவின் பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்ட புரட்சியே ரஷ்யப் புரட்சி எனப்படுகின்றது.
- ''**சமாதானம், காணி, ஊழல்**'' ஆகியனவே புரட்சியின் கருப்பொருள்களாயின.
- ''**வகுப்புகளற்ற சமூகம்**'' என்பதே புரட்சியின் இறுதி இலக்காக அமைந்தமை
- 1917 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் ஒக்டோபர் மாதத்திலும் இடம்பெற்ற இரண்டு புரட்சிகள் மூலம் புரட்சியாளர்கள் வெற்றி பெற்றமை

**ரஷ்யப் புரட்சிக்கு ஏதுவாகிய காரணங்கள்**

- ரஷ்யாவின் ஊழல் நிறைந்த சர்வதிகார மன்னராட்சி
- ஊழல் நிறைந்த நிலமானிய சமூக முறை
- பொதுமக்கள் மீது சுமத்தப்பட்ட அதிக வரிச்சுமை
- ரஷ்ய - யப்பான் யுத்தத்தில் ரஷ்யா தோல்வியடைந்தமையால் அரசுக்கு எதிராக எதிர்ப்புக்கள் தோன்றியமை
- புரட்சிக்காக லெனினின் தலைமைத்துவம் கிடைத்தமை
- ஆர்ப்பாட்டக்காரரை மடக்குவதற்காக அரசின் கடுமையான அடக்குமுறையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அதனை எதிர்கொண்டு ஒழுங்கமைந்தமையும்
- முதலாம் உலகப் போரின் போது விவசாயிகளைப் போர்வீரர்களாக ஆட்சேர்த்தமையால் ஏற்பட்ட நெருக்கடிகள்
- 1971 ஆம் ஆண்டாகும் போது ''சமாதானம் - காணி - உணவு'' என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு நாடெங்கிலும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள்
- போர்வீரர்களும் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து கொண்டமை
- கெரென்ஸ்கியினது தலைமையின் கீழான தற்காலிக அரசும் அதன் தோல்வியும்
- லெனினின் தலைமையில் நிலமானிய சமூக முறைமையையும் முதலாளித்துவப் பொருளாதார முறைமையையும் ஒழித்து வகுப்புகளற்ற சமூகத்தைக் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டு மீண்டும் நாடெங்கும் ஒழுங்கமைப்பு இடம்பெற்றமை
- பொதுமக்களின் துணையுடன் லெனின் வெற்றிபெற்றமை

**ரஷ்யப் புரட்சியின் விளைவுகள்**

- நாட்டுக்கு சமாதானம் கிடைத்தமை
- தனியார் காணி உரிமை இரத்துச் செய்யப்பட்டு, கூட்டுப்பண்ணை முறை ஆரம்பிக்கப்பட்டமை
- பொதுவுடைமை இயக்கம்
- மன்னன் ஆட்சிக்குப் பதிலாக பொதுவுடைமை அடிப்படையில் சோவியத் சோசலிச கூட்டாட்சிச் சங்கம் தாபிக்கப்பட்டமை
- பொதுவுடைமைத் தத்துவம் உலகெங்கும் பரவியமை
- கொமியுனிஸ்ட் கட்சி தோற்றம் பெற்றமை
- பாட்டாளி வகுப்பினரின் புரட்சிகள் உலகெங்கும் பரவியமை

**மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு "பொதுவுடைமைத் தத்துவத்தின் சாதகமான இயல்புகள்" எனும் தலைப்பில் கட்டுரையொன்று எழுதுமாறு மாணவரை வழிப்படுத்துக.**

- இதனை ஒரு தனியாள் செயற்பாடாக வழங்குக.
- கட்டுரையை எழுதுவதற்கு ஒரு வார கால அவகாசம் வழங்குக.
- மாணவர் ஒவ்வொருவரதும் கட்டுரையை மதிப்பிடுக.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- ரஷ்யப் புரட்சி தொடர்பான நூல்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பொதுவுடைமைத் தத்துவத்தை விளக்குவார்.
- பொதுவுடைமைத் தத்துவத்தின் சாதகமான இயல்புகளை மதிப்பார்.
- கட்டுரை எழுதும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை சரியாக பின்பற்றுவார்.
- விடயங்களைத் தெளிவாகக் கோவைப்படுத்துவார்.
- குறித்த நேரவரையினுள் வேலையைப் பூர்த்தி செய்வார்.

## அலகு 11.8 உலக மகா யுத்தங்களும் இணக்கப்பாடுகளும்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒட்டு மொத்த உலகம் இரு பெரும் யுத்தங்களை எதிர்கொண்டது. அவ்விரு யுத்தங்களும் ஐரோப்பாவில் ஆரம்பித்து ஏனைய கண்டங்களுக்கும் பரவின.

உலகின் வலிமை மிக்க பல நாடுகள் இந்த யுத்தங்களில் தொடர்புபட்டமையால் அவை உலக யுத்தங்களாக கருதப்படுகின்றன. இந்த இரண்டு யுத்தங்கள் காரணமாக பாரிய அளவில் உயிரிழப்புக்களும் சொத்து இழப்புக்களும் ஏற்பட்டன. உலக யுத்தங்களின் பாதகமான விளைவுகள் காரணமாக, மீண்டுமொரு உலக யுத்தம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் உலகில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காகவும் ஐக்கிய நாடுகள் தாபனம் போன்ற வலிமை மிக்க சர்வதேச அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டன. உலக யுத்தங்களுக்கு ஏதுவாகிய காரணங்கள், உலக யுத்தங்களின் தன்மை, உலக யுத்தங்களின் விளைவுகள், ஐக்கிய நாடுகள் அமைப்பின் முக்கியத்துவம் ஆகியன தொடர்பாக இந்த அலகின் கீழ்க் கவனஞ் செலுத்தப்படுகின்றது.

**தேர்ச்சி 8.0** : தற்கால உலகில் அரசியல் முரண்பாடுகளின் தன்மை பற்றி விசாரணை செய்து, அவ்வாறான முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.1** : அதிகாரம் தொடர்பாக ஏற்படும் பரஸ்பர முரண்பாடுகளின் அழிவுபூர்வத் தன்மையை விசாரித்தறிவார்.

**பாடவேளைகள்** : 04

**கற்றற்பேறுகள்** :

- உலக மகா யுத்தங்கள் என்பது யாது என விளக்குவார்.
- உலக மகாயுத்தங்களுக்கான காரணங்களை விவரிப்பார்.
- உலக மகாயுத்தங்களின் அழிவு பூர்வமான தன்மையை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல் :**
பின்வரும் பாடப்பகுதிகள் உள்ளடங்குமாறு பாடத்தைத்திட்டமிட்டுக் கொள்க.

**8.1.1 முதலாம் உலக மகாயுத்தம்**

- இடம் பெற்ற காலப்பகுதி 1914 ஆம் ஆண்டு யூலை 28 தொடக்கம் 1918 ஆம் ஆண்டு நவம்பர் 11 வரை

**முதலாம் உலக மகா யுத்தம் ஏற்படுவதில் பங்களிப்புச் செய்த காரணிகள்**

- ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின்போது பிரான்சும் ஜேர்மனியும் எதிரிகளாக மாறியமை
- பிரான்சை ஐரோப்பாவில் தனிமைப்படுத்துவதற்காக பிசுமாக்கு பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கை
- ஜேர்மன் பேரரசன் இரண்டாம் வில்லியத்தினது நடவடிக்கைகள்
- குடியேற்றங்கள் தாபித்தல் போட்டியும் இனவாத வளர்ச்சியும்
- ஐரோப்பா இரண்டு பிரிவுகளாகப் பிரித்தமை
- நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட ஆயுதப்போட்டி
- ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசன் கொலை செய்யப்பட்டமை

**போரின் தரப்பினர்கள்**

- நட்பு நாடுகள் (நேச நாடுகள்) - பெரிய பிரித்தானியா, பிரான்சு, ரஷ்யா, அமெரிக்க ஐக்கிய குடியரசு
- மத்திய அதிகாரத்துவ நாடுகள் (அச்சு நாடுகள்) - ஜேர்மனி, அவுஸ்திரியா, இத்தாலி, துருக்கி, பல்கேரியா, ஹங்கேரியா

**முதலாம் உலக யுத்தம் வியாபித்தமை**

- ஆஸ்திரியாவினால் சேர்பியா முற்றுகையிடப்பட்டமை
- ரஷ்யாவுக்கு எதிராக ஜேர்மனியினால் யுத்தம் பிரகடனம் செய்யப்பட்டமை
- ஜேர்மனிக்கு எதிராக பிரித்தானியாவினால் யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டமை
- ஐரோப்பாவின் குடியேற்ற நாடுகளில் யுத்தம் பரவியமை
- அமெரிக்க ஐக்கியக் குடியரசு யுத்தத்தில் தொடர்புபட்டமை

**முதலாம் உலக மகா யுத்தத்தின் விளைவுகள்**

- அச்சு நாடுகள் தோல்வியடைந்தமை
- பெருமளவு உயிர்களும் சொத்துக்களும் அழிவுற்றமை
- தோல்வியடைந்த நாடுகளுடன் வெற்றி பெற்ற நாடுகள் ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டு, அந்நாடுகளுக்குத் தண்டனை வழங்கின.
- ஐரோப்பாவில் காணப்பட்ட சர்வாதிகார மன்னராட்சிகள் வீழ்ச்சியடைந்தமை
- உலகின் வலிமை மிக்க நாடுகளாக அமெரிக்க ஐக்கியக் குடியரசும் பிரித்தானியாவும் எழுச்சி பெற்றமை
- சர்வதேச சங்கம் தாபிக்கப்பட்டமை

### 8.1.2 சர்வதேச சங்கம்

- சர்வதேச சங்கத்தை ஆரம்பிப்பதில் முன்னின்று செயற்பட்டோர்
- சர்வதேச சங்கம் தாபிக்கப்பட்டமைக்கான அடிப்படை நோக்கங்கள்
    - நாடுகளுக்கு இடையில் ஏற்படும் பேதங்களை அமைதியாகத் தீர்த்துக் கொள்ளல்
    - எதிர்காலத்தில் யுத்தங்கள் ஏற்படுவதைத் தவிர்த்தல்
    - சர்வதேச புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் கட்டியெழுப்புதல்
    - சிறிய அரசுகளின் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் பாதுகாத்தல்
    - உலகளாவிய ஒற்றுமையின் மூலம் உலக சமாதானத்தைப் பாதுகாத்தல்

**சர்வதேச சங்கம், சமாதானத்துக்காக எடுத்த முயற்சிகள்**

- சுவீடனும் பின்லாந்தும், ஜேர்மனியும் போலாந்தும், கிரேக்கமும் பல்கேரியாவும் ஈரானும் துருக்கியும் ஆகிய நாடுகளுக்கிடையே தோன்றிய யுத்த முரண்பாடுகளைத் தவிர்த்தமை
- சர்வதேச சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்புக்காக நியமிக்கப்படிருந்த குடியேற்றங்களின் ஆட்சி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்பார்வை செய்தல்.
- அகதிகளைப் புனருத்தாபனம் செய்தல்
- சட்ட விரோத அடிமை வியாபாரம், போதைப் பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தல்

**சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்குரிய காரணங்கள்**

- அமெரிக்க ஐக்கியக் குடியரசும் ரஷ்யாவும் சங்கத்தில் சேர்ந்து கொள்ளாமை
- நிரந்தரமான ஆயுதப்படை இல்லாமை
- அதிகாரமிக்க நாடுகளுக்கு இடையே ஒற்றுமை இன்மை
- உலக சமாதானம் சீர்குலைக்கப்பட்ட சில சந்தர்ப்பளில் அந்நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறியமை

**மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்கமாறு சிற்றேடொன்று தயாரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.**

- இதனை ஒரு தனியாள் செயற்பாடாக வழங்குக.
- முதலாம் உலக மகா யுத்தம் எனும் தலைப்பின் கீழ் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள உபதலைப்பக்ளுக்கு அமைவாக தகவல்களை உள்ளடக்கி, சிற்றேடொன்று தயாரிக்குமாறு அறிவுறுத்துக.
- சிற்றேட்டை ஆக்கபூர்வமாகத் தயாரிப்பதற்காக பொருத்தமான ஒளிப்படங்கள், தேசப்படங்கள் போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துக.
- சிற்றேடு தயாரப்பதற்காக எறத்தாழ ஒருவார கால அவகாசம் வழங்குக.
- சகல மாணவர்களதும் ஆக்கங்களை மதிப்பிடுக.
- சிறந்த ஆக்கங்களை வகுப்பு மாணவர் அனைவரும் வாசிப்பதற்காக சந்தர்ப்பமளிக்குக.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- உலக மகா யுத்தம் தொடர்பான ஒளிப்படங்கள், தேசப்படங்கள்
- இணைப்பு 1 உபதலைப்புக்கள்

- முதலாம் உலக மகா யுத்தம் தொடர்பாக பின்வரும் உப தலைப்புக்களின் கீழ் சிற்றேடொன்று (Booklet) தயாரிக்குக.
  - முதலாம் உலக மகா யுத்தத்துக்கு ஏதுவாகிய காரணங்கள்
  - யுத்தம் ஆரம்பமும் பரவுகையும்
  - யுத்தத்தின் தரப்பினர்கள்
  - யுத்தத்தின் விளைவுகள்
  - சர்வதேச சங்கம்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- முதலாம் உலக மகா யுத்தம் தொடர்பாக விவரிப்பார்.
- யுத்தத்தின் கோரத்தன்மையை எடுத்துக்காட்டுவார்.
- உப தலைப்புக்களின் கீழ் விடங்களைத் திரட்டுவார்.
- சிற்றேட்டை ஆக்கபூர்வமாகத் தயாரிப்பார்.
- குறித்த நேரவரையறையினுள் வேலையைப் பூர்த்தி செய்வார்.

**தேர்ச்சி 8.0** : தற்கால உலகில் அரசியல் முரண்பாடுகளின் தன்மை பற்றி விசாரணை செய்து, அவ்வாறான முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.1** : அதிகாரம் தொடர்பாக ஏற்படும் மோதலின்போது ஏற்படும் அழிவினைப் பற்றித் தேடியறிவார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற்பேறுகள்** :

- உலக யுத்தங்களுக்கான காரணங்களை விளக்குவார்.
- உலக யுத்தத்தினால் ஏற்படும் அழிவுகளை எடுத்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

இரண்டாம் உலக மகா யுத்தம் தொடர்பான பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத்திட்டமிட்டுக் கொள்க.

**8.1.3 இரண்டாம் உலக மகாயுத்தம்**

- இரண்டாம் உலக மகா யுத்தம் இடம் பெற்ற காலப்பகுதி 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் தொடக்கம் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை

**இரண்டாம் உலக மகா யுத்தம் ஏற்படுவதில் பங்களிப்புச் செய்த காரணிகள்**

- ஜேர்மனியில் ஹிட்லர் வலிமை பெற்றமையும் அவரது நடவடிக்கைகளும்
- இத்தாலியில் முசோலினியினது நடவடிக்கைகள்
- யப்பானின் நடவடிக்கைகள்
- நாடுகளின் சங்கத்தினது பலயீனம்

**இரண்டாம் உலக மகாயுத்தத்தின் தரப்பினர்கள்**

- நட்பு நாடுகள் (நேச நாடுகள்) - பிரித்தானியா, பிரான்சு, ரஷ்யா, அமெரிக்க ஐக்கிய குடியரசு
- மத்திய அதிகாரத்துவ நாடுகள் - ஜேர்மனி, இத்தாலி, யப்பான் (அச்சு நாடுகள்)

**யுத்தம் உலக யுத்தமாக வியாபித்த விதம்**

- ஜேர்மனியின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் - (போலாந்தை முற்றுகையிட்டமையும் யுத்தத்ததின் ஆரம்பமும்)
- இத்தாலியின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்
- பிரித்தானியாவும் பிரான்சும் ஜேர்மனிக்கு எதிராளிகளாகியமை
- ஆசியாவில் பேரரசொன்றை அமைப்பது தொடர்பான யப்பானின் நடவடிக்கைகள்
- சோவியத் ரஷ்யாவும் அமெரிக்க ஐக்கியக் குடியரசும் யுத்தத்துடன் தொடர்புபட்டமை
- ஜேர்மனியை ரஷ்யா முற்றுகையிட்டமை
- ஜேர்மனி அடிபணிந்தமை
- யப்பான் அடிப்பணிந்தமை

**இரண்டாம் உலக மகா யுத்தத்தின் விளைவுகள்**

- அச்சு நாடுகள் தோல்வியடைந்தமை
- உலகில் இதுவரை நிகழ்ந்த அகோரமான யுத்தமாக அமைந்தமை
- ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களின் அணுகுண்டுகளின் அகோரங்களைப் பிற்கால சந்ததியினரிடையேயும் காணமுடிகின்றமை
- பிரித்தானியா, பிரான்சு போன்ற நாடுகளில் பொருளாதார வீழ்ச்சியும் அமெரிக்க ஐக்கியக் குடியரசும், ரஷ்யாவும் உலக வல்லரசுகளாக எழுச்சி பெற்றமையும்
- குடியேற்ற நாடுகளுக்கு சுதந்திரம் கிடைத்தமை
- பொதுவுடைமையையும் முதலாளித்துவத்தையும் முதன்மையாகக் கொண்டு உலகில் இரண்டு அதிகாரக் கோட்டைகள் கட்டியெழுப்பப்பட்டமை
- ஆயுதமின்றிய யுத்தம் (பனிப்போர்)

**மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு சிற்றேடொன்று தயாரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.**

**செயற்பாடு 1**


- இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள ஒளிப்படத்தை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அப்படத்தில் காட்டப்பட்டுள்ளதற்கிணங்க யுத்தத்தின் அகோரத்தன்மையை எடுத்துக்காட்டி, ''உலக சமாதானத்தைப் பாதுகாக்கப் பங்களிப்புச் செய்வோம்'' எனும் தலைப்பின்கீழ் செய்தித்தாளுக்கென ஒரு கட்டுரை எழுதுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- இதனை தனியாள் செயற்பாடாக வழங்குக.
- இரண்டாம் உலக மகா யுத்தம் தொடர்பான படங்கள்/ ஒளிப்படங்களை உள்ளடக்கி, கட்டுரையை ஆக்கபூர்வமாகத் தயாரிக்குமாறு அறிவுறுத்துக.
- செயற்பாட்டுக்காக ஏறத்தாழ ஒரு வார கால அவகாசம் வழங்குக.
- சகல மாணவர்களதும் ஆக்கங்களை மதிப்பிடுக.
- சிறந்த ஆக்கங்களை வகுப்பு மாணவர் அனைவரும் வாசிப்பதற்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு 2**

- இணைப்பு 2 இல் தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- இதனை ஒரு குழுச் செயற்பாடாக வழங்குக.
- வகுப்பு மாணவர்களை பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 2 இல் தரப்பட்டுள்ள அட்டவணையைக் கரும்பலகையில் பிரதி செய்க.
- வகுப்பில் காட்சிப்படுத்தத்தக்கவாறு பிரிஸ்டல் அட்டையில்/ பெரிய கடதாசியில் அட்டவணையைப் பிரதி செய்து ஆக்கத்தைத் தயாரிக்குமாறு அறிவுறுத்துக.
- குழு உறுப்பினர் அனைவரதும் ஒத்துழைப்புடன் அட்டவணையைப் பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்துக.
- அட்டவணையை வகுப்பில் காட்சிப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது முன்வைப்புக்களின் பின்னர் குறைகளை நிவிர்த்தி செய்து கரும்பலகையில் அட்டவணையைப் பூர்த்தி செய்க.
- கரும்பலகையில் பூர்த்தி செய்த அட்டவணையை தமது அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்துகொள்ள மாணவர்க்கு சந்தர்ப்பமளிக்குக.
- இச்செயற்பாட்டுக்காக ஒரு பாடவேளையை வழங்குக.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

**இணைப்பு 1**



- இரண்டாம் உலக மகா யுத்ததின்போது ஹிட்லரின் நாஸி படைகள், ஒரு கிராமத்தைச்சுற்றி வளைத்து அங்கு வாழ்ந்த அனைவரையும் முகாம்களில் அடைத்து வைத்து, பின்னர் அவர்களுள் பெரும்பாலானோரை கொலை செய்துள்ளார். அங்கு இறந்த சிறுவரின் ஞாபகார்த்தமாக இந்த நினைவுச் சின்னம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
- அப்பருவச் சிறுவர்கள் துக்கப்படும் விதம், பெற்றாரை இழந்த தவிப்பு, அச்சம், நிச்சயமின்மை போன்றவற்றை உள்ளடக்கிய துன்ப உணர்வுகள் வெளிப்படும் வகையில் இச்சிற்பக் கலைஞர் இப்படைப்பை உருவாக்கியுள்ளார்.
- யுத்தத்துடன் எவ்வித தொடர்பும் அற்ற இவ்வாறான சிறுவர்கள் பெருந்தொகையானோரின் உயிர்கள் யுத்தத்தினால் காவு கொள்ளப்பட்டுள்ளன.
- அதற்கமைய யுத்தத்தின் அகோரத்தன்மையையும் சமாதானத்தின் முக்கியத்துவத்தையும் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் மூலம் எடுத்துக்காட்டி "உலக சமாதானத்தைப் பாதுகாக்கப் பங்களிப்புச் செய்வோம்" எனும் தலைப்பின் கீழ் செய்தித்தாளொன்றுக்கு கட்டுரை எழுதுமாறு மாணவரை வழிப்படுத்துக.

**இணைப்பு 2**

| இரண்டாம் உலக மகாயுத்தத்துக்கு ஏதுவாகிய காரணங்கள் | பங்குகொண்ட நாடுகள் | அந்நாடுகள் பெற்ற வெற்றிகள் | யுத்தத்தின் விளைவுகள் |
|---|---|---|---|
| ..............................<br>..............................<br>..............................<br>..............................<br>.............................. | ..............................<br>..............................<br>..............................<br>..............................<br>.............................. | ..............................<br>..............................<br>..............................<br>..............................<br>.............................. | ..............................<br>..............................<br>..............................<br>..............................<br>.............................. |

- பிறிஸ்டல் அட்டைகள்
- பெல்ற் பேனைகள்
- இரண்டாம் உலக மகாயுத்தம் தொடர்பான ஒளிப்படங்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- விடய உள்ளடக்கம் பற்றிய அறிவு, மனப்பாங்குகள், குறித்த செயற்பாடுகளைச் சரியாகச் செய்தல், ஆகியனவும் கற்றற் பேறுகளும் அளக்கப்படும் வகையில் கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்களைத் தயாரித்துப் புள்ளி வழங்குக.

**தேர்ச்சி** : தற்கால உலகில் அரசியல் முரண்பாடுகளின் தன்மை பற்றி விசாரணை செய்து, அவ்வாறான முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.2** : மோதல்களைத் தவிர்ப்பதில் சர்வதேச சமாதானம் ஏற்படுவது தொடர்பாக ஆய்ந்து அறிவார். (முரண்பாடு தீர்த்தலின்போது சர்வதேச இணக்கப்பாட்டைப் பகுப்பாய்வு செய்வார்.)

**பாடவேளைகள்** : 03

**கற்றற்பேறுகள்** :

- ஐக்கிய நாடுகள் அமைப்பு பற்றி அறிமுகம் செய்வார்.
- உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்பை எடுத்துக் கூறுவார்.
- தற்போது உலக சமாதானத்தின் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையால் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

இரண்டாம் உலக மகா யுத்தம் தொடர்பான பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத்திட்டமிட்டுக் கொள்க.

**8.2 ஐக்கிய நாடுகள் அமைப்பு**

- ஐக்கிய நாடுகள் அமைப்பைத் தாபிப்பதில் முன்னின்றோர்
- 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆந்திகதி, ஐக்கிய நாடுகளின் பிரகடனம் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டமை
  - சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணிவருதல்
  - நாடுகளுக்கு இடையே நட்புத்தொடர்புகளை வளர்த்தல்
  - மனித உரிமைகளையும் அடிப்படையான சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச ஒத்துழைப்பைப் பெறுதல்

**ஐக்கிய நாடுகள் அமைப்பின் கட்டமைப்பு**

- பொதுச்சபை
- பாதுகாப்புச்சபை
- பொருளாதார சமூக அலுவல்கள் தொடர்பான சபை
- நம்பிக்கைப் பொறுப்புச் சபை
- சருவதேச நீதிமன்றம்
- பொதுச் செயலாளர் அலுவலகம்

**உலக சமாதானத்தைப் பேணுவதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு எடுத்த முயற்சிகள்**

- அணுசக்தி அதிகார சபையைத் தாபித்தல்
- தீர்த்து வைத்த பிரச்சினைகள்
  - சுவெஸ் கால்வாய் நெருக்கடி

- Gulf நெருக்கடி
    - தற்கால உலக சமாதானத்தைக் காப்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு எடுக்கதக்க நடவடிக்கைகள்
    - பொருனாதார தடை விதித்தல்
    - அணு ஆயுதங்களை வரையறுத்தலும் கட்டுப்படுத்தலும்
    - சமாதானம் காக்கும் படைகளை ஈடுபடுத்தல்
    - கியூபா ஏவுகணை நெருக்கடியையும் தீர்த்தல்
- தற்கால உலக சமாதானத்தைக் காப்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு எடுக்கத்தக்க நடவடிக்கைகள்

மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு இணைப்பு I இல் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

- இதனைத் தனியாள் செயற்பாடாக வழங்குக.
- போதுமான அளவு நேரத்தை ஒதுக்கி வழங்குக.
- மாணவரது செயற்பாடுகளை மதிப்பிடுக.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

**இணைப்பு 1**

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

- ஐக்கிய நாடுகள் அமைப்பு தாபிக்கப்பட்டமைக்கான காரணங்களை விளக்குக.
- ஐக்கிய நாடுகள் அமைப்பின் கட்டமைப்பை விளக்குக.
- உலக சமாதானத்தைக் காப்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு எடுத்த நடவடிக்கைகளை விளக்குக.
- தற்கால உலகில் சமமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு எடுக்கத்தக்க நடவடிக்கைகளை விளக்குக.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- செயற்பாட்டக்குரிய விடய உள்ளடக்கம் கற்றற்பேறுகளும் அளக்கப்படும் வகையில் கணிப்பீடு மதிப்பீட்டுக்கான நியமங்களைத் தயாரித்துப் புள்ளி வழங்குக.

**அட்டைப்படம்**

செல்வி. சந்தியா அத்தபத்து தேசிய கல்வி நிறுவகம்

**கணினி வடிவமைப்பு**

திருமதி. எம்.என்.எப். றிஹானா தேசிய கல்வி நிறுவகம்

**ஏனைய உதவிகள்**

திரு. பியதிலக்க பர்ணாந்து சமூக விஞ்ஞானத்துறை, தே.க.நி.